## Contents. Page.


1. பதிப்புரை. ... ... ... 2
2. கல்லூரியின் 1960—61 ஆம் ஆண்டின் நடப்பு அறிக்கை. ... 3
3. தமிழ்க் கல்வியில் செய்யுட் படிப்பு. பேராசிரியர் திரு. சரவண ஆறுமுக முதலியார். 11
4. கலிங்கத்துப் பரணி—கு. சிவமணி, எம். ஏ., பி. டி., ... ... 14
5. மொழி, நம் விழி—அ. சிவஞானம். ... ... ... 20
6. அறிவும் பண்பும்—மா. மாணிக்கம்— ... ... .... 21
7. இளமையில் வறுமை—டி. கே. சௌரிராசன். ... ... 23
8. சிறு துளி—பா. பொன்னப்பன், தமிழ்ப் பேராசிரியர். ... ... 24
9. வள்ளுவர் சொல்லமுதம்—ஓ. கே. தியாகராசன். ... .... 27
10. இன்பச் செலவு—அ. செங்கோட முதலி. ... .... 28
11. குறள் மலர்—ம. க. சையத்தாசுதீன், ... ... ... 30
12. வாழ்க்கையும் இலக்கியமும்—ஞா. பிரான்ஸிஸ் துரைராஜ். ... 31

1. A Glimpse Into The State of Education—
Prof: S. Arumuga Mudaliar. I
2. Our Citizenship Camp—S. Arumugam. ... ... III
3. The Influence of Films on Children.—S. Amalraj. ... V
4. Wild Life Our National Heritage—P. Thyagarajan. .... VII
5. List of Prize Winners. ... ... .... IX
6. Do Tamil Pandits Training Course. ... XI
7. VI College Day Celebrations, March 1961. ... XII

# பதிப்புரை.

இவ்வெளியீடு நமது கல்லூரியின் ஆறுவது பொறி மலர். இதன் கண் நமது கல்லூரி நிகழ்ச்சிச் செய்திகளும், ஆசிரியர் மாணவர் ஆகியோர் தம் கட்டுரைகளும் கவிதைகளும் பிறவும் முறையே நிழலோவியங்களா கவும் எழுத்தோவியங்களாகவும் கருத்தோவியங்களாகவுந் திகழ்கின்றன.

இம்மலருக்கு விளம்பரந் தந்துதவிய வணிகப் பெருமக்கட்கு எமது நன்றி உரியது.

நமது மாநிலக்கல்வித்துறை நடாத்தி வரும் முப்பாலறங்களாம் நண்பகல் உணவளித்தல், பள்ளிச்சீரமைப்பு, சீருடை வழங்கல் ஆகிய வற்றின் அருமை பெருமை ஒருமை தமைக்கண்டு மகிழ்ந்த நமது இந்திய நடு அரசினர் நமது மாநிலப் பொதுக்கல்வி நெறியாளர், **உயர்திரு: நெ. து. சுந்தரவடிவேலு** அவர்கட்குப் **'பத்ம ஸ்ரீ'** என்னும் செவ்விய விருதினை வழங்கிப் பாராட்டியுள்ளனர் என்னுஞ் செய்தி நம் கல்லூரி யிலுள்ளோர் அனைவர்க்குமட்டுமன்றித் தமிழகத்திற்கே பெருமிதமளிப்ப தாகும்.

ஆறுவது மலர் வரும் இந்நன்னாளிலே நமது முதல்வர் **பேராசிரியர். ச. ஆறுமுக முதலியார்** அவர்கள் இக்கல்லூரியினின்றும் விடுதி பெற்றுச் சென்றுள்ளார். சென்னை மாநிலக் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிவந்துள்ள **பேராசிரியர். க. கோவிந்தராசனுர்** நமது கல்லூரி முதல்வராக வந்துள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மலருக்கு உதவிய ஆசிரியர் மாணவரனைவர்க்கும் இம் மலர்ப் பொறுப்பாளர் பதிப்பாளர் ஆகியோர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இதுபோன்றே இனி வரும் மலர்களும் மேன்மேலும் ஒளியும் மணமும் பெறவேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

# குமரபாளையம் அரசினர் பயிற்சிக் கல்லூரியின் 1960—61 ஆண்டின் நடப்பு அறிக்கை.

**தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெருமக்களே!**

எங்கள் கல்லூரியின் ஆறாவது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டி பரிசு வழங்கு விழாவும் ஒரு சேர நிகழும் இந் நன்னாளிலே உங்கள் அனைவரையும் பெருமிதத்தோடும், நன்றியுடனும், மகிழ்ச்சியோடும் நெஞ்சார வருக, வருக உங்கள் வரவு நல்வரவாகுக என வரவேற்கின்றேன்.

கல்லூரி முதல்வன் என்ற முறையிலும் இக் கல்லூரி ஆசிரியத் தோழர்கள் சார்பிலும் மாணவ ஆசிரியர்தம் சார்பிலும் உங்களை வரவேற்கின்றேன். நம் தலைவர் திரு சை. வெ. சிட்டிபாபு அவர்களைக் கல்வி உலகம் நன்கு அறியும். இவர்கள் பல்லாண்டுகளாக அரசியலார் கலைக் கல்லூரிகளில் பேராசிரியராயும், காட்பாடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராயும், இப்போது கோவை, பெருமாவட்ட பள்ளித் தணிக்கையாளராகவும் பணியாற்றிக் கொண்டு வருவதால் தொடக்க நிலை, இடை நிலை, உயர் நிலை, கல்லூரி நிலை, ஆசிரியர் பயிற்சி முதலிய கல்வியின் பல நிலைகளிலும் நல்ல படிப்பறிவும், பட்டறிவும் எய்தியுள்ளார். காட்சிக் கெளியராய், கடுஞ் சொல்லும் இல்லராய், நல்லாசிரியருக்குரிய இன்னும் பல நற்பண்புகளையும் வாய்த்திருப்பதால் ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் முதலிய பலராலும் விரும்பப்பட்ட கல்வி அலுவலராக விளங்குகின்றார். இத்தகையார் நம் கல்லூரி ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தர முன்வந்துள்ளமை நாம் பெற்ற பெரும் பேறாகும். இவரை முதல்வன் என்ற முறையிலும், எல்லோருடைய சார்பிலும் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

## 1. இட அமைப்பு நலன்களும், கல்விப் பாடங்களும், ஆசிரியர்களும் :—

இக் கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் இங்கே தோன்றியது. இது தோன்றுவதற்குப் பெருந்துணை செய்தவர்கள் உள்ளூர் கட்டிடக் குழுவினராவார். அவர்களுக்கு என்றென்றும் நம் நன்றி உரித்தாகுக. இக் கல்லூரிக்கும் இதைச் சேர்ந்த மாணவர் இல்லத்திற்கும் விளையாட்டு வெளியிடங்கட்கும் ஆசிரியர் இல்லங்கட்கும் கட்டிடம் கட்டுதற்கு என இப்போது கல்லூரி இருக்கும் இடத்திற்கு மருங்கிலும் முன்னரும் 20-காணி பரப்புள்ள இடத்தை அரசியலார் வாங்குவதற்கு முயன்று வருகின்றனர். இதற்கென சிறந்த கட்டிடத் திட்டம் பன்னூறாயிரம் வெண்பொற்காசுகள் ஒதுக்கியுள்ளனர். இம் முயற்சிகள் விரைவில் நிறைவேறும் என எதிர்பார்க்கலாம். இக் கல்லூரியில் இளங்கல்வி ஆசிரிய மாணவர்கள் அனைவரும் பொதுவாகக் கற்கவேண்டியவை. 1. உளநூல் 2. கல்விக் கொள்கைகள் 3. பள்ளி ஆட்சிமுறை 4. கட்செவிப்புலக் கல்வி 5. குடிமைப் பயிற்சி 6. உடற் கல்வி ஆகியனவாம். இவைத் தவிர விருப்பப் பாடங்களாக வருவன: தமிழ், ஆங்கிலம், கணக்கு, சமூகவியல், அறிவியல் ஆகியனவாம். ஆறு ஆண்டுகளாக இக் கல்லூரியில் பல நன் மரபுகளை வளர்த்துவரும் பணியில் மாணவர்களும் பேராசிரியர்களும் ஒருங்கே முயன்று வருகின்றோம்.

சென்ற ஆண்டு இறுதியில் ஆங்கில உதவிப் பேராசிரியர் திரு. G. D. கோபால்ரத்தினம் எம். ஏ., எல். டி., குடந்தைக்குப் பேராசிரியராக மாற்றப்பட்டு அவரிடத்தில் திரு. சி. பழனிச்சாமி எம். ஏ., பி. இடி., பணியாற்றுகின்றார். அறிவியற் பேராசிரியர் திரு. வி. என். இராமசாமி அவர்கள் டிசம்பர் முதல் விடுமுறையில் சென்றுள்ளார். அவரிடத்திற்கு இன்னும் யாரும் வரவில்லை.

இவ்வாண்டும் இக் கல்லூரியில் விருப்பப் பாடங்கள் அனைத்தும் (ஆங்கிலம் தவிர) தமிழ் வழியாகவே கற்பிக்கப்பெறுகின்றன. எஞ்சியுள்ள பொதுப் பாடங்களும் தமிழ்வழியே நடைபெறுவதற்கு உரிய முயற்சிகள் செய்யப்பெற்று வருகின்றன. அவைகளும் 1961—62 முதல் பல்கலைக் கழகத்தாரின் இசைவுடன் தமிழிலேயே நடைபெறும். "அப்போதைக்கு இப்போதே

சொல்லிவைத்தேன்'' என்றாற்போல் பேராசிரியர்களும் முன்னறிவிப்புடன் இதற்கென தம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வதில் முனைந்துள்ளனர்.

**2. மாணவர் எண்ணிக்கை :—**

இவ்வாண்டு இக் கல்லூரியில் சேர்ந்த இளங் கல்வி மாணவர் தொகை 75. இடையில் பல காரணங்களால் மூவர் நின்று விட்டனர். எஞ்சியுள்ளவர்கள் தொகை 72.

இவர்கள் எடுத்த விருப்பப் பாடங்களின் புள்ளிவிவரங்கள் வருமாறு :

தமிழ்—20 ; ஆங்கிலம்—39 ; அறிவியல்—20 ; கணக்கு—45 ; தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு முதல் பிரிவில் சேர்ந்த புலவர்களின் எண்ணிக்கை 40 ; இரண்டாவது பிரிவில் தற்போது 40 புலவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

இரு பிரிவு மாணவர்களும் எம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

| மாவட்டம் | B. T. | பு. ப. முதற் பிரிவு. | பு. ப. 2-ம் பிரிவு |
|---|---|---|---|
| சேலம் | 56 | 18 | 14 |
| கோவை | 16 | 9 | 11 |
| இராமநாதபுரம் | — | 1 | 3 |
| தஞ்சாவூர் | — | 3 | 1 |
| மதுரை | 1 | 5 | 3 |
| திருச்சி | 1 | 1 | 5 |
| வட ஆற்காடு | — | — | 1 |
| தென் ஆற்காடு | — | 3 | — |
| செங்கற்பட்டு | — | — | — |
| திருநெல்வேலி | — | — | 2 |
| நீலகிரி | — | — | — |
| திருவனந்தபுரம் | — | — | — |
| சென்னை | 1 | — | — |
| | 75 | 40 | 40 |

பிற்பட்ட மாணவர்களில் சிலர் பெறும் உதவித் தொகை வருமாறு :

| | B. T. | பு. ப. முதற் பிரிவு | பு. ப. 2-ம் பிரிவு |
|---|---|---|---|
| 1. பிற்பட்ட வகுப்பு உதவித் தொகை | 27 | 24 | 25 |
| 2. நாட்டாண்மைக் கழக உதவித்தொகை | 16 | 1 | — |
| 3. அரிசன நலத்துறை உதவித் தொகை | — | — | — |
| 4 அரிசன நலத்துறை தேர்வுத் தொகை | — | 1 | — |

### 3. நூலகமும் படிப்பகமும் :

இக் கல்லூரி நூலகத்தில் இவ்வாண்டுத் தொடக்கத்தில் 2288 நூல்கள் இருந்தன. இவ்வாண்டு இந்த நூலகத்திற்கென கல்வித் துறையாளர் 1000 வெண் பொற்காசுகள் வழங்கியுள்ளனர். அதில் 500 வெண் பொற்காசுகள் கல்வி பற்றிய பருவ இதழ்கள் வாங்குவதற்கும், இன்னும் 500 வெண் பொற்காசுகள் கல்வி பற்றிய நூல்கள் வாங்குவதற்கும் ஒதுக்கப்பெற்றுள்ளன.

நூலகத்தில் இவ்வாண்டு 292 புது நூல்கள் சேர்க்கப்பெற்றுள்ளன. ஆக நூலகத்தில் இவ்வாண்டு மொத்தமுள்ள நூல்கள் 2580 ஆகும்.

படிப்பகத்திற்குத் தற்பொழுது கல்விபற்றிய இதழ்களாக வருவன 31 ஆகும். ஆசிரியர்களும் மாணவர்களும் படிப்பகத்தையும் நூலகத்தையும் நன்கு பயன்படுத்திவருகின்றனர்.

### 4. குடிமைப் பயிற்சி—பாசறை வாழ்க்கை :

மாணவர் ஆண்டிறுதிக் குடிமைப் பயிற்சி வாழ்க்கை 11—9—60-ம் நாள் முதல் 20-9-60 முடிய பெருந்துறை, மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்தது. இதில் இக் கல்லூரி மாணவர்கள் எழுபத்து ஐவரில் எழுபத்துமூவர் கலந்துகொண்டனர். கோவை மாவட்டக் கழகச் சிறப்பு ஆணையரின் உறுதுணைவர் T. V. வாசுதேவன் M. A., அவர்கள் பாசறை வாழ்க்கையைத் தொடங்கிவைத்தார்கள்.

இப் பாசறை வாழ்க்கையில் பெருந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பெருந்துறை வட்ட காவல் துறை ஆணையர் திரு. சாமிநாத முதலியார், பவானி டாக்டர் திரு. K. பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு குடிமைப் பயிற்சியின் சிறப்பினைப்பற்றி பல்லாற்றானும் எடுத்துரைத்துச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். அவர்களுக்கு எங்களது நன்றி.

பார்வையாளர் விழாவன்று கோவை அரசினர் மகளிர் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திருமதி N. சண்முகசுந்தரம் B. A. (Hons) L. T., அவர்கள் தலைமை தாங்கி மாணவர்கள் பாசறை வாழ்வில் கற்றுக்கொண்டவற்றைச் செயல் முறையிலும் செய்துகாட்டியதைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். இப் பாடிவாழ்க்கையர் இடையில் ஓர் நாள் கத்தூரிபாய் கிராமம், பழைய கோட்டை ஆகிய இடங்களுக்குக் கல்விநோக்குச் சுற்றுலாவாகச் சென்றுவந்தனர்.

### 5. கற்பித்தற் பயிற்சி :

இக் கல்லூரி மாணவர்கள் 22—8—60 முதல் 3-9—60 முடிய முதற் பருவப் பயிற்சியைப் பெற்றனர். அப்போது மாணவர் பலரும் தத்தமக்குரிய பள்ளிகளில் அவ்வப் பள்ளியின் ஆசிரியர்கள் பாடம் நடத்துவதைக் கண்டு பயன் பெற்றனர். பயிற்சியின் இரண்டாம் பருவம் 17—10—60 முதல் 9—11—60 வரை நிகழ்வுற்றது. இதில் மாணவர்கள் தாமே பாடங்களை நடத்தியும் அவ்வப் பள்ளிகளில் நிகழ்ந்த பிற கல்வித் திட்ட நிகழ்ச்சிகளில் பங்குகொண்டும்

பயன்பெற்றனர். பவானி. ஈரோடை, (செங்குந்தர், மதராசா, நகராட்சிப் பள்ளிகள்) கவுண்டர்பாடி, இடைப்பாடி, பெருந்துறை, திருச்செங்கோடு, சங்ககிரி, குமாரபாளையம் ஆகிய பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மாணவர் தம் பயிற்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

புலவர் பயிற்சியைச் சேர்ந்த மாணவர்களும், குமாரபாளையம், பவானி, ஈரோடை, சங்ககிரி ஆகிய பள்ளிகட்குச் சென்று கற்பித்தற் பயிற்சியைப் பெறுகின்றனர். இப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு இந் நன்னாளில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளும் கடப்பாடுடையேன். இப் பயிற்சிக் காலங்களில்நம் மாணவர் தம் கைவண்ணம் கொண்டியற்றிய பயிற்சித் துணைக் கருவிகளான மின்னட்டைகள், குறிப்பேடுகள், நிலப் படங்கள், ஒளிச் செருகு படங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தினர் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். குறுகிய காலத்தில் இம் மாணவர் தம் நிறைந்த உழைப்பின் பயனாக இக் கருவிகளை ஆக்கிய திறனை நான் மிகவும் பாராட்டுகிறேன். தேர்வாளரும் பிறரும் இவற்றைப் பார்வையிட்டு மிகவும் பாராட்டியுள்ளனர் இவற்றுள் சிறந்தனவாகத் தேர்ந்தெடுத்தவற்றையும், கல்லூரியிலுள்ள பிறவற்றையும் கொண்டு அமைக்கப்பெற்ற கண்காட்சியையும் இன்று நீங்கள் கண்டு களித்தீர்கள்.

## 6. உடற் கல்வி :

இக் கல்லூரி உடற்கல்வித் துறையில் கைப்பந்து, பூப்பந்து, மென்பந்து, வளைபந்து முதலிய விளையாட்டுகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பெற்றுள்ளது. மாணவர் தரும் பொருளும் அரசியலார் உதவித் தொகையுமாக 1226 வெண்பொற்காசுகள் உடற் கல்வித் திட்டத்தை வளமாக்கப் போதுமானதாக இல்லாவிடினும், இக் கல்லூரி நிலையான புதுக் கட்டிடத்தைப் பெற்ற பிறகாவது விளையாட்டிற்கு வேண்டிய புது நலன்களைச் செய்துகொள்ளலாம் என்னும் அமைதிபெற வேண்டியதிருக்கின்றது.

இக் கல்லூரியின் ஆண்டுவிழா உடலுறுதிப் போட்டிகள் (Sports) 18—2—61-ல் நடைபெற்றன. இதைத் தவிர முற்ற விளையாட்டுப் போட்டிகளும் அவ்வப்போது நடைபெற்றன.


இதற்கென கல்லூரி முதல்வர் அளித்துள்ள வெள்ளிக் கேடயத்தை நெடுஞ்செழியன் இல்லத்தினர் கைப்பற்றிக்கொண்டனர் போட்டியில் மிகுதியான அளவுமட்டுமின்றி மிகுந்த ஆர்வத்துடனும், மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்துகொண்டு ஊக்கந் தந்தனர். வெற்றி பெறுவோர் அடைகின்ற "உடலுறுதிச் செம்மல்" என்ற சிறப்புப் பட்டத்தை இளங் கல்விப் பகுதியில் திரு. P. N. கருப்பண்ணனும், திரு. M. இராமசாமியும் புலவர் பயிற்சி வகுப்பில் திரு. P. வேங்கடாசலமும் பெற்றனர்.

திரு T.R. சுந்தரம் பிள்ளை தந்தருளிய உருள் கலனை உடலுறுதிப் போட்டிகளில் வென்ற செங்குட்டுவன் இல்லத்தினர் பெற்றனர். தமிழாசிரியர் பயிற்சிப் பகுதி முற்ற விளையாட்டுக்களுக்காகப் பழைய மாணவர் மன்றத்தினர் ஒரு வெள்ளிக் கேடயத்தை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

## 7. கட்செவிப் புலக் கல்வியும், கலையும், கைத்தொழிலும் :

கடந்த ஆண்டுகளைப் போலவே நடப்பு ஆண்டிலும் செய்முறைப் பயிற்சிக்குப் பல்வேறு வாய்ப்புக்கள் அளிக்கப்பெற்றுள்ளன. மத்திய திரைப் படக் கருவூலத்திலிருந்து பெற்ற கல்வித் திரைப் படங்களை மாணவர்கள் பார்த்ததோடன்றிக் கருவிகளை இயக்கும் பயிற்சியும் ஒருவாறு பெற்று, ஒவ்வொருவரும் ஒவ்வொரு படப்பாடமாவது நடத்தியுள்ளனர் மேலும் ஒவ்வொருவரும் இங்கோ அல்லது கற்பித்தற் பயிற்சிபெறும் பள்ளிகளிலோ ஒரு வானொலிப் பாடமும் நடத்தியுள்ளனர்.

கல்வி உலகத்திலேயே முதன் முதலாகத் தமிழ் மாநிலக் கல்வித் துறையினர் நமது கல்லூரி முதல்வரையும், தமிழ் உதவி ஆசிரியர்களையும் கொண்டு பிற பாடங்களைப் போன்றே தமிழ் கற்பித்தலுக்கும் உதவுமாறு [1] கண்ணகியின் வழக்குரை [2] சேரமான் கணைக்கால் இரும்பொறை [3] சங்ககால வள்ளல்கள் [4] திருநாவுக்கரசரும் அப்பூதியடிகளும் [5] பொற்கைப் பாண்டியன் போன்ற தமிழ்ப் படச் சுருள்களை வெளியிட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அடுத்த ஆண்டும் இவைபோன்ற சிலபடங்கள் இக் கல்லூரி வழியாக வெளிவரலாம். கைவேலைப் பயிற்சி




*Staff & Students (P. T. Class I Course) 1960.*

பெறும் மாணவர்கள் அட்டை வடிவங்கள் அமைத்தலையும், நூற்கட்டமைப்பையும் பயின்று வருகின்றனர்.

## 8. கல்லூரி மன்றம் :

இம் மன்றத் தலைவர் பேராசிரியர், திரு. ச. ஆறுமுக முதலியார் M.A., B. O. L,, L.T. [கல்லூரி முதல்வர்] துணைத் தலைவர் திரு. V. விருத்தகிரீசன் M. A., M. Litt; L. T.

12—7—60 ஆம் நாளன்று தொடங்கிச் செயற்படுகின்ற இம்மன்றம் இதுவரை பதினாறு கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. இம் மன்றச் சார்பில் 11—8—60-ல் நிகழ்ந்த கலை நிகழ்ச்சிகளுக்குக் கல்லூரி முதல்வரவர்கள் தலைமை தாங்கினார்கள். ஈரோடை கலைமகள் கல்வி நிலைய முதல்வரும், தொடர்பாளருமான திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B. A., L. T., அவர்கள் தொடங்கிவைத்தார்கள். 6—2—61-ல் காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. M கன்னியப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த மன்ற நிறைவு விழாச் சிறப்புக் கூட்டத்தில் அழகப்பா பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. பி. துரைக்கண்ணு முதலியார் M A., L T, அவர்கள் மாணவர்க்குப் பயன்படத்தக்க வண்ணம் அறிவுரைகள் வழங்கினார்கள்.

இக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களான திருவாளர்கள் M. D. கோதண்டராமன் M. A., M. Ed , V. N. இராமசாமி M. A., L T., S. பழனிச்சாமி M. A , B. Ed., B பொன்னப்பன் M. A , L. T , ஆகியோர் சில கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி மாணவர்க்கு அறிவுரை வழங்கினர்.

இவையன்றி ஐந்து சொற்போர் கூட்டங்களையும், திருவள்ளுவர் நினைவுநாள், வன விலங்குப் பாதுகாப்பு நாள், உலக உடல் நலப் பாதுகாப்பு நாள், ஐக்கிய நாடுகள் அவையமைப்பு நாள் ஆகிய சிறப்புக் கூட்டங்களையும் மன்றம் நடத்தியிருக்கிறது. இம்மன்ற நிகழ்ச்சிகள் யாவும் இனிது நிறைவேறுமாறு தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும் சிறப்பித்த பெருமக்களுக்கும் ஏனையோருக்கும் எனது உளங் கனிந்த நன்றி உரியதாகுக.

## 9. கல்லூரித் தமிழ் மன்றம் :

இக் கல்லூரித் தமிழ் மன்றம் பேராசிரியர் திரு. ச. ஆறுமுக முதலியார் M.A., B.O.L , L. T., அவர்களைத் தலைவராகவும், புலவர் பயிற்சி வகுப்பு பொறுப்பாசிரியரும், உதவித் தமிழ்ப் பேராசிரியருமான திரு கு. சிவமணி M. A , B. T., அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு இயங்கிவருகின்றது. இம்மன்றத்தின் முதல் 10 கூட்டங்கள் தமிழ்ப் புலவர் பயிற்சி வகுப்பு முதற்பிரிவு மாணவர்களால் நடத்தப் பட்டன. இம்மன்றம் தொடர்ந்து இயங்கி வருகின்றது. இதில் கல்வி முறைகள், கலை, பண்பாடு, இலக்கியம் ஆகிய பல்துறைப் பகுதிகளை மாணவர்கள் ஆராய்ந்து பயன் எய்துகின்றனர்.

## 10. மாணவர்கள் சுற்றுலாச் செலவு :

இக் கல்லூரியின் தமிழாசிரியர் பயிற்சி முதற்பிரிவினைச் சேர்ந்த மாணவர்கள் துணைப் பேராசிரியர் திரு. கு சிவமணி M. A., B.T., அவர்கள் தலைமையில் 10—11—60 முதல் 13—11—61 முடிய தென் மாவட்டங்களிலும், மலையாளத்திலுமாகக் கல்வி நோக்குச் சுற்றுலா சென்றுவந்தனர்.

இளங் கல்வி வகுப்பு மாணவர்கள் கல்வி நோக்குச் சுற்றுலாவிற்கென மைசூர் மாநிலத்தில் ஏற்பாடு செய்திருந்தமை சில காரணங்களால் தடைப்பட்டுவிட்டது. சமூகப் பகுதி மாணவர்கள் கல்லூரி முதல்வரவர்களோடும், சமூகவியல் துணைப் பேராசிரியர் திரு. வி. விருத்தகிரீசன் M. A., M. Litt. L.T. அவர்களோடும் 3-1-61 முதல் 5-1-61 முடிய ஏர்க்காடு, திருவண்ணாமலை, செஞ்சி நெய்வேலி, வடலூர், விருத்தாசலம் முதலிய இடங்களுக்குக் கல்வி நோக்குச் சுற்றுலாவாகச் சென்றுவந்தனர்.

## 11. கவின் கலைமன்றம்:

1956-ம் ஆண்டு தொடங்கிய இம்மன்றம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. ச. ஆறுமுக முதலியார், M. A , B. O. L., L T., அவர்களைத் தலைவராகவும், திரு பா. பொன்னப்பன் M. A., L. T , அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு செயலாற்றி வருகின்றது. இவ்வாண்டிலும் சென்ற ஆண்டுகளைப்

போலவே தமிழ் இன்னிசைப் போட்டியும், தனி நடிப்புப் போட்டியும் நடந்தன. இப்போட்டிகளிலே இளங்கலை வகுப்பு மாணவர்களும், புலவர் பயிற்சி வகுப்பு மாணவர்களும் பெரும் பங்குகொண்டனர். இவற்றோடு இன்று மாற்றுடைப் போட்டியும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும் அதையும் காணுவீர்கள். போட்டியில் வெற்றி பெற்றோருக்குத் தலைவர் பரிசுகள் வழங்குவார்.

## 12. மக்கட் பணிக் கழகம் :

இக் கழகம் கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகவும், சமூகவியல் துணைப் பேராசிரியரைத் துணைத் தலைவராகவும் கொண்டு சீரிய முறையில் பணியாற்றிவருகின்றது. இக் கல்லூரியில் பயிற்சிபெறும் மாணவர் அனைவரும் இக் கழகத்தின் உறுப்பினராவர்.

'மக்கட் பணியே மாபெரும் பணி'' என்பதற்கொப்ப வழக்கம்போலவே நம் மாணவர்கள் 1960-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் பெருந்துறை, பெத்தம்பாளையம் முதலான ஊர்களில் நெடுஞ்சாலை அமைத்தும் திருத்தியும் புதுக்கியும் பணிபுரிந்தனர். 11—10—60-ம் நாள் நம் மாணவர் அனைவரும் ஓலப்பாளையம் சென்று அவ்வூர் சுற்றுப் புறச் சூழல்களைத் தூய்மைப்படுத்திச் செம்மையாக்கியதோடமையாது ஊரினைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும் வழிவகைகளையும் அவ்வூர் மக்களுக்கு விளங்கக் கூறினர். அவ்வூர்க் குழந்தைகள் மகிழும்வண்ணம் சிற்றுண்டியும் வழங்கினர். ஊருக்கொரு பள்ளி யென்ற கருத்துப்படி அவ்வூராருக்காக நிலையானதோர் தொடக்கப் பள்ளியும் ஏற்படும்படியான சிறந்த வாய்ப்பினையும் செய்துவிட்டனர்.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற மூதுரைப்படி இக் கழகம் நண்பகல் உணவு அளிப்பதற்காகக் குமாரபாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு 25 வெண்பொற்காசுகள் அளித்துவருகின்றது.

பெருமையைத் தரக்கூடிய இச் செயல்களைச் செய்தமைக்காக இக் கழகம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது.

## 13. மாணவரில்லம் :

நமது மாணவரில்லம் குமாரபாளையம் பெரிய பாலத்தின் தென்புறம் காவிரிக் கரையிலே பழைய அப்புராயர் சத்திரத்திலே அமைந்துள்ளது. இந்த இல்லம் 25-பேருக்குமேல் ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருப்பதாலும், இளங் கல்விப் பயிற்சி மாணவர்களைத் தவிர, புலவர் பயிற்சி மாணவர்களும் இணைந்திருப்பதாலும் அனைவரும் விடுதியில் சேர வாய்ப்பளிப்பது அரிதாய் இருக்கிறது நம் கல்லூரி மாணவர்கள் அனைவரும் ஒருங்கே ஒருமித்து வதியக் கூடிய விடுதிக் கட்டடத்தை எழுப்புதற்குரிய நன்னாள் மிக அண்மையிலேயே வரலாம். இவ்வாண்டு மாணவரில்லத்தில் 29-மாணவர்கள் மிகுந்த நெருக்கடியுடன் தான் இருந்துவருகின்றனர் என்று சொல்லத் தேவையில்லை. இவ்வாண்டு விடுதித் துணைக் காப்பாளராக திரு. கு. சிவமணி M. A., B.T., அவர்கள் பணியாற்றிவருகின்றார்கள்.

## 14. கல்லூரி மாணவர்கள் மலர் :

இம் மாணவர் மலர் இக் கல்லூரியின் ஆறாவது மலராகும். இதுகாறும் ஐந்து மலர்கள் வெளியிடப்பெற்றுள்ளன. இவ்வாண்டு இறுதிக்குள் ஏழாவது மலரும் வெளிவரவிருக்கிறது. இம் மலரில் மாணவர்கள் அருந் தமிழிலும் ஆங்கிலத்திலும் தங்கள் எழுத்து வன்மைகளைக் காட்ட வாய்ப்பு அளிக்கப்பெற்றுள்ளது. மேலும் மாணவர்களது ஒத்துழைப்புடன் எடுக்கப்பெற்ற புகைப்படங்கள் இம்மலர் அழகுக்கு அணிசெய்கின்றன. உள்ளூர் வெளியூர் வணிகர் தங்கள் விளம்பரப் பொருளைக்கொண்டு இதை வெளியிட மாணவர்கள் ஊக்கங்காட்டி வருகின்றனர்.

## 15. பழைய மாணவர்கள் கழகம் :

1956 ஏப்ரல் முதல் இக் கழகம் இயங்கிவருகின்றது. திரு. N. ஞானசங்கரன் B.A.,B.T., அவர்கள் இதன் தலைவராகவும், திரு G. கிருட்டினசாமி B. A, B. T, அவர்கள் செயலாளராகவும் பணியாற்றிவருகின்றனர். கல்லூரி ஆசிரியர் குழுவின் சார்பாளராக திரு. ம. தே. கோதண்டராமன் M. A, M. ED., அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளனர்.

இக் கல்லூரியிலே 1960-ஆம் ஆண்டு இளங் கல்வியாளர் பயிற்சியில் பயின்று பல்கலைக் கழகத் தேர்விலே எழுத்துப் பகுதியில் முதலிடம் பெற்று இக் கழகத்தினர் வழங்கும் பரிசிலுக்குத் திரு. நரசிம்மாச்சாரி B, A., B. T., உரியவராகின்றார். ஆண்டாண்டுதோறும் தமிழாசிரியர் பயிற்சிபெறும் புலவர்களும் சேர்வதால் பழைய மாணவர் கழக உறுப்பினர் தொகை பெருகி வருகின்றமை மகிழ்ச்சி தரக்கூடியது. அரசினர் நடத்தும் புலவர் பயிற்சித் தேர்வில் 1960 மே மாதத் தேர்வில் வித்துவான் திரு அ. நடராசனும், டிசம்பர்த் திங்கள் தேர்வில் வித்துவான் திரு. செ. சோ. நமச்சிவாயமும் முதலிடம் பெற்று தேர்ச்சியடைந்திருப்பதால் அவர்களும் பரிசுக்குரியவர்களாகின்றார்கள். இவ்வாண்டு வழக்கம்போலவே மாணவர்கள் கல்லூரியை விட்டுச்செல்லும் முன்பே 3 வெண் பொற்காசுகளைக் கொடுத்து இக் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினர் ஆகுமாறு இக் கழகத் தலைவரும், செயலரும் வேண்டிக்கொள்கின்றார்கள். போட்டிப் பந்தயங்களில் வெற்றிபெறும் இல்லத்தினர்க்குக் கேடயம் ஒன்றும் இவ்வாண்டு வழங்குகின்றனர்.

பழைய மாணவர்கள் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டுள்ளமை மிகவும் பாராட்டுதற்குரியதாகும். ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் பெருந்திரளாக வந்திருந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறேன். பழைய மாணவர் கழகம் பல வழிகளிலும் இவ் விழாவிற்கு உதவிசெய்ய முன் வந்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

## 16. தேர்வுகள் :

இக் கல்லூரியில் பயிற்சிபெறுவோர் அனைவரும் ''வெற்றியேயன்றித் தோல்வியில்லை'' என்பதைக் குறிக் கோளாகக் கொண்டு இயங்கிவருகின்றோம்.

1960-ம் ஆண்டு செயல் முறைத் தேர்வில் முதல் வகுப்பில் இருவரும், இரண்டாம் வகுப்பில் பன்னிருவரும், மூன்றும் வகுப்பில் முப்பத்து மூவரும் ஆக நாற்பத்தேழுபேரும் தேர்ச்சி பெற்று நூற்றுக்கு நூறு விழுக்காடு வெற்றி பெற்றனர். எழுத்துத் தேர்வில் இரண்டாம் வகுப்பில் மூவரும், மூன்றும் வகுப்பில் முப்பத்துநான்கு பேருமாக 37-பேர் வெற்றியடைந்தனர். இது நூற்றுக்கு 78.7 விழுக்காடாகும். இவ்வாண்டு சென்ற ஆண்டைக் காட்டிலும் மாணவர் செயல்முறைத் தேர்விலும், எழுத்துத் தேர்விலும் மிகுந்த மதிப்பெண் பெற்று அனைவரும் வெற்றிபெறுவர் என்று நம்புகின்றேன்.

தமிழாசிரியருக்கென அரசினர் நடத்திய பயிற்சிப் பொதுத் தேர்வில் முதற் பிரிவில் 40-பேருக்கு 36-மாணவர்கள் வெற்றிபெற்று 90 விழுக்காடடைந்து சிறப்பெய்தினர். புலவர் பயிற்சி மாணவர்கள் ஏனைய அறிவியல் சமூக பாடங்களுக் கொப்பவே மொழிப் பாடத்திற்கும் சிறந்த முறையில் பட விளக்கங்கள், மின்னட்டைகள், சுழலட்டைகள், நாடக, கவிதைத் தொகுப்புகள், பண்பாட்டை விளக்கும் படத் தொகுப்புகள் முதலான கல்விக்குத் தொடர்பான துணைக் கருவிகளைத் தொகுத்தும, வகுத்தும் வகைப்படுத்தி கண்டார் வியக்கும்வண்ணம் ஒரு சிறந்த கண்காட்சியாய் அமைந்திருந்தமை சாலவும் நன்றாயிருந்தது. அதைப் பலரும் பாராட்டினார்கள். இரண்டாம் பிரிவினர் செய்த முறைகளையும் இன்று நீங்கள் கண்டு மகிழ்ந்தீர்கள்.

என்னுரையை முடிக்கு முன்னர் இவ்வாண்டுப் பயிற்சியினை முற்ற முடிக்கும் அருமை மாணவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நீவிர் என்றும் இன்றுபோல் எவ்விடத்தும் எமது அன்புக்கும் பரிவிற்கும் உரியவராவீர். நீவிர் அனைவரும் வரும் தேர்வில் வெற்றிபெற்றே தீருவோம் என்ற ஒரே உறுதியுடன் ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் பெற்று முயல்வீரேல் எண்ணிய எண்ணியாங்கு எய்துவிர் என்பது திண்ணம். உங்கள் வெற்றியை வைத்துத்தான் நம் கல்லூரியைப் பிற பயிற்சிக் கல்லூரிகளுடன் ஒப்பிட்டு நோக்கி பெருமிதம்கொள்ளமுடியும். முடிவாக இவ்வாண்டு கல்லூரி ஆட்சி சிறப்புற இயங்குவதற்குத் தோன்றாத் துணையாக இருந்த தமிழ் மாநிலக் கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்கும், இக் கல்லூரியில் பணியாற்றிவரும் அனைவர்க்கும் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாடு உடையேம். இக் கல்லூரிப் பேராசிரியர்களும், துணைப் பேராசிரியர்களும், உடற்கல்வி இயக்குநரும், கைக்கலை ஆசிரியரும், கல்விப் படங்காட்டுநரும் என்னுடன் ஒரே மனங்கொண்டு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்

துக் கல்லூரியின்பால் தங்களுக்குள்ள பற்றையும் நல்லெண்ணத்தையும் காட்டியுள்ளனர். இஃது இன்றேல் இக் கல்லூரி ஆட்சியைத் திறமுறவெற்றி விளங்க என்னால் இயக்கி இருக்கமுடியாது. கல்லூரி நூலகத்தும், அலுவலகத்தும் பணியாற்றும் நூலகர், முதற் கணக்கர், துணைக் கணக்கர் முதற்கொண்டு, தட்டெழுத்தாளர், துணையாளர், பணியாளர் ஈறாக அனைவரும் தத்தம் கடமைகளைச் செவ்வனேசெய்து வந்தமைக்கு அவர்கள் அனைவருக்கும் என் நன்றி. மாணவ நன்மணிகளாகிய உங்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகின்றது. உங்களுடைய இடையறா ஊக்கம்; ஒழுங்கு, உறுதி இவற்றால் நம் கல்லூரிச் சகடு கல்விப் பாதையிலே தட்டுத் தடையின்றிக் கவினுறச் சென்று கொண்டிருக்கின்றது.

நாணமருமுன் மீண்டும் ஒருமுறை இவண் அமர்ந்திருக்கும் விருந்தினர் அனைவர்க்கும், தலைவர் அவர்களுக்கும் நல்வரவு கூறி அடுத்து பரிசுகளை வழங்குமாறும் அதன்பின் அறிவுரையாற்றி, அன்னார் தம் கேட்டார் பிணிக்கும் தகையவாய, ஆன்றவிந்தடங்கிய கொள்கைகளை நமக்கு அன்புடன் வழங்கி தாம் இன்புறுவது கண்டு உலகு இன்புறச் செய்யுமாறும் தலைவரவர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

சலவைக்குச் சிறந்தது!

N நிர்மலா சோப் 44

தயாரிப்பவர் :—

நிர்மலா சோப் ஒர்க்ஸ்,

ராஜவீதி, கொமாரபாளையம்.




Staff & Students (P. T. Class II Course) 1960 - 61.

# ★ தமிழ்க் கல்வியில் செய்யுட் படிப்பு. ★

[பேராசிரியர் திரு சரவண ஆறுமுக முதலியார், M. A. B. O. L, L. T, முதல்வர், அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம்.]

நமது நாடு உரிமை பெற்றதற்குப் பின்னர், நாட்டில் நிலவும் கல்வித் துறைகளிலும் முறைகளிலும் நாட்டின் பண்பாடு, நாகரிகம், கலை முதலியவற்றின் நிலைக்கேற்றவாறு பல சீர்திருத்தங்களும், புதுத் திட்டங்களும் வந்துகொண்டிருக்கின்றன. சென்னை மாநிலத்தில் கடந்த பதின்மூன்று ஆண்டுகளுக்குள் நிகழ்ந்த கல்வி முறைச் சீர்திருத்தங்களில் தலையாயவையாக தாய்மொழி அல்லது வட்டாரமொழி (Regional language) கலைத் திட்டத்தில் (Curriculum) முதலிடம் பெற்றதையும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியளவில் மொழி ஒழிந்த ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் வாயிலாக (Medium of instruction) அது அமைந்துள்ளதையும் கருதலாம். இன்று பி. ஏ; கலைவகுப்புகளுக்கும் தாய் மொழியின் வழியாகவே கல்வி கற்பிக்கலாம் என்ற நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்களுக்குத் தாய்மொழியைக் கற்பிக்கும்போது ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற நோக்கமும் பயனும் உண்டு. தாய்மொழியைச் செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, துணைப்பாட நூல் முதலிய பல பகுதிகளாகப் பிரித்துக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கற்பிக்கின்றோம். அவற்றுள் செய்யுள் கற்பிப்பதன் நோக்கத்தையும் பயனையும் ஒருவாறு காண்போம்.

ஒரு மொழியில் எழுந்துள்ள இலக்கியங்களைப் பற்றோடும் சுவையோடும் படித்து, இலக்கிய நயமுணர்ந்து இன்புறும் வழியில் மாணவர்களைச் செலுத்துவதே அம்மொழிப் படிப்பின் மிகச் சிறந்த நோக்கமாகும். உயர்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள், தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல் இன்பமூறும் ஊற்றுக்களாம். இலக்கியங்கள் நம் முன்னோர்களாகிய தெய்வப் புலமைச் சான்றோர்கள் தம் வாழ்நாட்களிற் பட்டறிந்து கண்டுவைத்த உண்மைகளாகிய விலைமதிக்கவொண்ணா மணிகள் நிரப்பி வைத்திருக்கின்ற பொற்பேழைகளாம். இவற்றைப் பெற்று மகிழ்வது அவர்கள் கால்வழியில் வந்த பிற்றைநாள் தலைமுறையார்களின் தலையாய கடனாகும். அவற்றைப் பயின்று அவற்றில் இலைமறைகாய்களாகச் செறிந்து கிடக்கும் பொருள் நயங்களையும் அவற்றின் வெளித் தோற்றங்களாகிய சொல் நயங்களையும் கண்டுணர்ந்து சுவைத்தின்புறுதலே கற்றலின் மிகச் சிறந்த நோக்கமாகும்.

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்பர் உறைவார் பதி"

என்றும்,

"நுண்ணுணர் வினரோடு கூடி நுகர்வுடைமை,
விண்ணுலகே ஒக்கும் விழைவிற் றூல்"

என்றும் கூறப்படுகின்றதே! இந்நுண்ணர்வினரும் தவலருந் தொல்கேள்வித் தன்மையினரும் இயற்றியருளிய நூல்களைப் படித்தலே அன்னாரோடு கூடி மகிழ்தலேயாகும்.

உலகத்து நாம் பல்வேறு மக்களோடு பழகும்போதும் வயிற்றுப் பிழைப்புக்காகப் பல துறைகளிலும் கிடந்துழன்று, ஓடியாடித் திரிந்து, உழைத்து அலுத்துப் போகும்போதும் தோன்றக்கூடிய வெறுப்பையும் சலிப்பையும் இலக்கியங்களே போக்கவல்லன. புல்லினஞ் சார்தல், மடி, வீண் காலப் போக்கு, பயனற்ற எண்ணத்தையும் சொல்லையும் செயலையும் பாராட்டுதல் முதலிய பல குறைகளைப் போக்கி, நல்லினம் நாடல், முயற்சி, நற்காலப்போக்கு, பயனற்ற எண்ணத்தையும் சொல்லையும் செயலையும் பாராட்டுதல், முதலிய பல நிறைகளை ஆக்கவல்லது இலக்கியப் படிப்பு. பரந்த அறிவையும் விரிந்த பார்வையையும் நல்கவல்லது. காவிய இன்பத்தைச் சுவைத்து மகிழ்வதைவிடப் பேரின்பம் வேறு உலகத்தில் இல்லை என்பர் ஆன்றோர். வாய் ஆறாக வயிறு களனாக உணரும் அறுசுவைகளோ சிறிது நேரமே நிலைத்து நின்று பிறகு

மறைந் தொழிவதோடு தெவிட்டும் தன்மையும் வாய்ந்தன. அளவுக்கு மிஞ்சினால் நோய்க்கும் இடந்தரும். ஆனால் செவியாறுகச் சிந்தை களனாக உணரும் கவிச் சுவையோ எனின் தெவிட்டாத தெள்ளமுதமாய் மேலும் மேலும் வளர்ந்து. நினைக்கும்போதெல்லாம் புத்தின்பம் பயப்பதாய், நமதுள்ளத்தை என்றும் இன்பத்தில் ஆழ்த்தவல்லதாயிருக்கின்றது "கவிப்பா வமுதம் இசையின் கறியொடு கண்ணற்குண்ணக், குவிப்பான்" என்ற அடியிற் கம்பர்பெருமானும், "தமிழென்ப தமிழ்துக்கு நேர்" என்பதையும், அது இசையோடு இசைந்து உண்ணத் தெவிட்டாத தெள்ளமுதமாகும் என்பதனையும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்துள்ளதைக் காண்க. கவி இன்பத்திற்குச் செவி சாய்த்து ஒருவர் எவ்வளவில் ஈடுபடலாகும் என்பதைக் கவியொடு ஊனும் உயிரும் கலந்து ஒன்றுபட்டுப் பரவசத்தோடு பாடிய இராமலிங்க அடிகளாரது,

"வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நஞ்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம
லினிப்பதுவே."

என்னும் செந்தமிழ்த் தீஞ்சுவைக் கவியிற் காணலாம். 'ஆயுந்தொறுந் தொறுமின்பந்தருங் கல்வி' என்பார் பிறரும். கவிநயத்திலேயே ஆழ்ந்தமிழ்ந்தெழுந்த திருவள்ளுவர், பண்புடையார் நட்பில் பயில்தொறும் இன்பம் பெருகுவதை விளக்குவதற்கு, "நவில்தொறும் நூல் நயம்போலும்" என்ற அரிய உவமையை அமைத்துள்ளார்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்?"
"செவிக் குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்."

என்பனவும் செவிச் சுவையின் கவினுறு சிறப்பைக் காட்டுவனவாம். சுருங்கக் கூறின் வாழ்க்கையின் பசி, பிணி, அவலக் கவலை, முதுமை, தளர்ச்சி முதலியவற்றைப் போக்கி மட்டிலா, மாறிலா மகிழ்ச்சியைத் தந்து என்றும் இளமையாக்க வல்லது இவ்வின்பம். சிறந்த இலக்கியங்களில் ஆங்காங்கு செறிந்துகிடக்கும் ஒன்பான் சுவையும் அவற்றிற் கேற்ற ஓசை நயமும் கற்போர் உள்ளத்திற்குக் கழிபேருவகை ஊட்டுவனவாம்.

இத்தகைய பேரின்பத்தை வாழ்க்கையில் 'தொட்டில் முதல் சுடுகாடு'' வரையில் ஒவ்வொருவரும் அடைவதற்குரிய முற்பயிற்சியாகச் "சின்னஞ் சிறிய" பாப்பா வகுப்பிலிருந்து "பென்னம் பெரிய" எம். ஏ, புலவர் முதலிய வகுப்புக்கள் வரையில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் செய்யுள்பாடத் திட்டத்தில் (Syllabus) சேர்க்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகிறது. செய்யுளைக் கற்பிக்கும்போது புதிய சொற்கள், தொடர்களின் அறிவு, பொருள் அறிவு; மொழிப்பயிற்சி முதலியன இடையிடையே வரினும், அவைகளே செய்யுள் கற்பிப்பதன் நோக்கமும் பயனுமல்ல. மாணவர்களின் சொற்களஞ்சியத்தை (Vocabulary) ப் பெருக்குவதற்கென்றோ அவர்களது அறிவு வளர்ச்சிக்கென்றோ, கருத்துக்களை வெளியிடு மாற்றலை வளர்ப்பதற்கென்றோ செய்யுளைக் கற்பித்தல் கூடாது. ஆனால் உயிர்நிலைக் கருத்தையுணர்ந்து புலவரின் கருத்துக்கள், உணர்ச்சிகள் (Feelings) இயற்கைப் பொருள்கள் (Nature) மக்களியற்கை (Human nature) உளச் சுவைகள் (Emotions) முதலியவற்றின் அழகும் எழிலும் உணர்தல், அவ்வழகிய பொருள்களின்பால் பற்று (Aesthetic sense) ஆகியவற்றைக் கிளர்ச்சிசெய்து வளர்ச்சியுற வைப்பதே செய்யுட் படிப்பின் சிறந்த நோக்கங்களாகும்.

செய்யுள் அழகாயிருப்பதோடு (Beauty) மட்டுமின்றி உண்மையையும் எடுத்தியம்புகின்றது (Truth). இவ்வுண்மையினை அழகும் எழிலுமுற எடுத்துரைக்கும் தன்மையைச் செய்யுளின் வாயிலாக மாணவர்கள் உணரும்படி செய்துவிட்டால் கற்றதனாலாகும் மிகச் சிறந்த பயனை அவர்கள் அடைந்துவிட்டதாகக் கருதலாம். இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும், மக்களியற்கையிலும் அமைந்து கிடக்கும் அழகோடு உண்மையையுமுணரும் ஆற்றலைப் பெற்றின்புறுதலை அவர்களிடையே தோற்றுவிக்க வேண்டும்.

இனி, மாணவர்களிடையே, பாடல்களிற் பயிலும் சுவைகளுக்கேற்ற உளச் சுவைகளை அல்லது மனவெழுச்சிகளை (Emotions) செய்யுள் கிளர்ச்சி செய்கிறது. சரியான முறையில் அவைகள் கற்பிக்கப்படுமானால், அச் சுவைகளை நன்முறையில் வளர்ச்சியுறவும் செய்கிறது. எந்த மன எழுச்சி ஒரு கவி தோற்றுவதற்குக் காரண

மாக இருந்ததோ அச் சுவையை அக்கவி மாணவர்களிடை உண்டுபண்ணவேண்டும். அம்முறையில் அது கற்பிக்கப்படவேண்டும் "The growth and development of our emotional life especially, greatly depends on how the mother tongue is taught. The emotional effect of Literature and Poetry is something which is of vital importance in the development of personality. This emotional training and development depends absolutely on the mother tongue." என்று ரைபர்ன் என்னும் பேராசிரியரும் கூறுகின்றார். எனவே ஒவ்வொரு மாணவருக்கும் உரிய உளச் சுவைகளுக்கு ஏற்ற செய்யுட்கள் அவ்வவ் மாணவருக்குக் கற்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவரின் உளச் சுவையை உணர்ந்து அதற்கேற்ற பாடலைப் (பாறுக்கி) எடுத்துக் கற்பிக்கும் பெரும் பொறுப்பு தாய்மொழி ஆசிரியரைச் சார்ந்திருக்கிறது. ஆனால் பல்லாயிர மாணவர்களுக்கு ஒரே பாட நூலாக அமைந்திருக்கிற பாடத் திட்டப்படி கல்வி கற்பிக்கப்படுகின்ற கல்வி முறையில், ஒவ்வொரு மாணவனுக்கும் ஏற்ற மன எழுச்சி வெளிப்பாடு, வளர்ச்சி முதலியவற்றிற்குரிய வழிகளைத் தனிப்பட்ட பள்ளிகளும் ஆசிரியர்களும் வகுத்துக்கொள்ளுதற்குரியர்.

செய்யுள் படிப்பு, மாணவர்களின் கற்பனை (Imagination) படைப்பாற்றல் (Creative faculty) ஆகியவற்றையும் வலுப்படுத்த வல்லது. அவர்களின் தனித்தன்மையை வளர்த்து (Individuality) தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் ஊட்டவல்லது. பெற்ற தாய்மொழியும், பிறந்த நன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவாம் இவற்றின் வழி நில்லார் மக்களல்லர்; மாக்களே. இதை அடுத்து "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற பரந்த உலகப் பொது நோக்கமும் இலக்கியப் படிப்பினால் விளையக்கூடிய பயனாகலாம்.

இனி, தாய்மொழி இலக்கியத்தைப் படிப்பதனால் பள்ளிக்கூட வாழ்வில், அதன்பின்னர் வாழ்க்கை முழுவதிலும் காரண காரிய முறையில் பொருள்களை உணர்ந்து உட்கொண்டு வெளிப்படுத்துவது என்னும் சிறந்த மனப்பயிற்சியும், நிலைத்ததும் ஆழ்ந்ததுமான ஈடுபாட்டைக் கல்வியில் செலுத்தலும், முறைப்படி ஒழுங்காக வேலை செய்தலும், குறித்ததைக் குறித்த மொழியில் வெளியிடுதலும், கலைத் துறைகளில் இறங்கி உழைத்தலும் ஆகிய நற்பழக்கங்கள் பல இயல்பாகவே வந்தெய்தும். அவ்விலக்கியம் எழுந்த காலத்து அந் நாட்டின் வரலாறு, வாழ்க்கை முறை, நடை, உடை, எண்ணங்கள், பழக்கவழக்கங்கள், பொருள், அரசியல், சமயம் முதலியவற்றின் நிலை, இசை, கூத்து முதலிய கலைகள், அந் நாட்டில் நிறுவப்பட்டுள்ள பல நிலையங்கள் ஆகியவற்றையெல்லாம் உணர்வதற்கும், அவற்றின் இயல்புகளை ஆராய்தற்கும் ஆன ஒரு நல்ல வாய்ப்பை அளிக்கும் நோக்கமும் செய்யுட் படிப்புக்குண்டு இப்பயனை இலக்கியச் சான்று (Literary evidence) என்னும் - பெயரால் அழைக்கலாம். வரலாறு (History) கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் (Epigraphy) பழங் கட்டிடங்கள், கோயில்கள் (Archaeology) பண்டை நாணயங்கள் (numismatics), அயல் நாட்டினர் குறிப்புக்கள். (Foreigntestimony) முதலியன இல்லாத ஒருகாலத்து வரலாற்றுக் குறிப்புக்களை இலக்கியச் சான்று கொண்டே தான் நிறுவ இயலும். அவைகள் இருக்கும் ஒரு கால வரலாற்றுக்கும் இலக்கியச் சான்று, அரண் செய்யுமே ஒழிய முரண் செய்யாது.

இறுதியாக இவை எல்லாவற்றிலும் சிறந்த செய்யுட் படிப்பின் நோக்கத்தைக் கூறுவோமாக. நந்தம் செந்தமிழ் மொழியில் அறம் பொருளின்ப வீடுகளின் இயல்பைத் திறப்பட விளக்கும் சீரிய நூல்களும் ஒழுக்கத்தின் விழுப்பத்தை உணர்த்த வல்ல நூல்களும் உள்ளத்தை உருக்கி மருள்நெறி நீக்கி அருள் நெறியிற் செலுத்தவல்ல கடவுள் வாழ்த்து, வணக்கம், மெய்யுணர்வுபற்றிய தெய்வத் திருப்பனுவல்களும் எண்ணிறந்தன உள்ளன. இவற்றைப் படிப்பதால் நல்லொழுக்கமும் கடவுள் அன்பும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் மாணவர்கள்பால் அமைய இடமுண்டு.

இத்தகைய அருமை பெருமைகளைக் கொண்டுள்ள செய்யுளைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தாய்மொழி ஆசிரியர்கள் தக்க முறைகளில் புகட்டி அப் படிப்பின் நோக்கங்கள் பயன்களாக நடைமுறையில் மாணவர்கள் கைவரப்பெறுமாறு கற்பிப்பார்களாக. இது ஒன்றே அவர்கள் நாட்டிற்குச் செய்யும் தொண்டாகும் என்பதில் ஐயமில்லை.

# ❋ கலிங்கத்துப்பரணி. ❋

[நாடகம்]

கு. சிவமணி எம். ஏ., பி. டி.
[அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமரபாளையம்.]

## இயல் 4. காட்சி 1.

உறுப்பினர் :— அனந்தபத்மவர்ம சோடகங்கன் ; எங்கராயர் ; மாதவன் ; காவலன் ; அரசவைப் பொதுமக்கள்.

இடம் :— கலிங்கமன்னன் அரசவை.

நிலைமை :— அரசன் அனந்த பத்மன் ஆழ்ந்த எண்ணத்தோடு அமர்ந்துள்ளான் : சினக்குறிப்பை அவன் முகம் காட்டுகிறது. அமைச்சர் எங்கராயரும், படைத் தலைவன் மாதவனும் இருமருங்கிலும் உளர். பெருமக்களனைவரும் அமைதி பெற்றுப் பதுமைகளாக உள்ளனர் : ஓர் ஆழ்ந்த அமைதி நிலவுகின்றது.

அனந்த :— [எதனையோ யெண்ணியவனாகித் தலையை அசைத்து] அமைச்சர் எங்கராயரே ! நீவிர் ஆயிரம் கூறினும், இனியும் கலிங்கம் சோணாட்டின் அடிமையாக வாழ்வதை யாம் விரும்பவில்லை.

எங்க :— கலிங்கர்கோவே ! அடிமைத் தளையை அகற்றுதற்குரிய காலம் வரும்வரையில் நாம் காத்திருக்கத்தானே வேண்டும். "கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து, மற்றதன், குத்தொக்க சீர்த்த இடத்து" என்ற அறிவுரையை மறக்கமுடியுமா ? [காவலன் ஒருவன் அரசவை புகுந்து மன்னனை வணங்குகிறான்.]

காவலன் :— கலிங்கத்தார் நலம் காணுங் காவல ! வாழ்க நின் கொற்றம். சோழப் பேரரசின் தூதுவர் தங்கள் ஆணை நோக்கி நமது அணி வாயிலில் காத்துள்ளார்.

அனந்த :— நன்று, காவல ! இங்குவர விடுக. [காவலன் வணங்கி அவையை நீங்குகிறான்]

எங்க :— மன்னர் பெரும ! இப்போது வரும் தூதுவன் நம் கடமையை நினைவூட்ட வருகின்றான்போலும் ! [தூதுவன் மன்னன் முன்வந்து வணங்கி நிற்கின்றான்.]

தூது :— கலிங்கக் காவல ! திருமகளும் பெருநிலச்செல்வியும் உரிமை கொண்டாட, எண்திசையிலும் வாகைசூடி, மாண்பினால் இம்மாவுலகத்தில் தம் புகழ் நிறுவிய, சோழப் பேரரசின் தூதுவன் வணங்குகின்றேன்.

அனந்த :— வந்த தூது எதன்பொருட்டோ ?

தூதுவன் :— கூடாதாரைக் கூடல் சங்கமத்தில் ஓடச்செய்து வாகை சூடி, விருதராசபயங்கரர் என்ற விருதுப் பெயர் பூண்ட எம் பேரரசப் பெருமானார் ஆணைத் திருமுகத்தைத் தங்கள்பால் சேர்ப்பித்து அதற்கான விடை பெற்றேகவே வந்துள்ளேன்.

அனந்த :— தானைத் தலைவ, மாதவ! அவ் வோலை பெற்றுப்பிரித்து அதன் செய்தியைப் படியும்.

மாதவன் :— [ஓலையைப் பெறுதல்—உரத்த குரலில் படித்தல்]: "திரிபுவனச் சக்கரவர்த்தி, சுங்கம் தவிர்த்து எங்கும் இருள் நீக்கிய இராச கேசரி வர்மரான உடையார் திரு குலோத்துங்க சோழ தேவரின் ஆணையைத் தம் முடிமீது தாங்கிய படைத் தலைவரும், பல்லவர் குலத் தோன்றலுமாய கருணாகரத் தொண்டைமான், கலிங்கக்காவலரும் சோழப் பேரரசின் சிற்றரசருமாகிய அனந்த பத்மவர்மசோடகங்கருக்கு விடுத்துள்ள ஆணைத் திருமுகம் என்னவெனில், நம் பேரரசப் பெருமானின் பிறந்த நாளின்போது, காஞ்சிப் பெருநகர் சித்திர மண்டபத்திற் கூடிய வேனிற்கால நாளோலக்கத்தில் நீவிர் கலந்துகொள்ளவில்லை. ஆண்டுதோறும் செலுத்தற்குரிய திறைப் பொருளையும் நீவிர் கட்டத் தவறிவிட்டீர். மேலும் சோழ நாட்டின் வடவெல்லையிலுள்ள சிற்றூர்கள் சிலவற்றைக் கைக்கொண்டீர் எனவும் அறியநேர்கின்றது. எனவே நெறி வழுவிய நும் செயலுக்குரிய மறுமொழியையும், எமக்குச் செலுத்தற்குரிய திறைப் பொருளையும் இன்றிருந்து இருபது நாட்களுக்குள் அளிக்கத்தவறின், எம் சோழப் பெரும்படை நும் கலிங்கத்தை நோக்கி அணிவகுக்கும் என்பதறிக. இங்ஙனம், சோழப் பேரரசரின் திரு ஆணை வழி ஒழுகும் மாதண்டநாயகம் கருணாகரத்தொண்டைமான் ஆணை" [சினம் பொங்க] அரசே! கருணாகரன் ஒருபடை முதல்வன் என்பதையே மறந்துவிட்டான் போலும்; அரசர் அனந்தபத்மவர்மருக்கு ஆணைத் திருமுகம் அனுப்புகின்றானும் இனி இதனைப் பொறுக்கமுடியாது, அரசே!

எங்க :— படைத் தலைவரே! நொந்துவாடியிருக்கும் மன்னரின் உள்ளத்தை மேலும் வெந்து நோகச் செய்யாதீர் வீண் ஆரவாரம் எதற்கு? சிறிது அமைதி பெற்றமையும்

தூதுவன் :— அரசே! திருமுகத்திற்குரிய மாற்றம்?

அனந்த :— மாற்றம்!......[நகைக்கிறான் : முகம் சினத்தால் சிவப்பேறுகிறது] இக் கலிங்காதனிடமிருந்து இனியும் திறைப் பொருளை எதிர்பார்த்து ஏங்க வேண்டாமென்று நின் இறைவனிடம் இயம்பு.

தூதுவன் :— பிறர் பொருளை எதிர்பார்த்து வாழும் நிலைமை என்றுமே எங்கள் இன்பவளங் கொழிக்கும் பொன்னி நாட்டுக்கு இருந்ததில்லை. மண்ணைப் பொன்னாக்கும் அன்னை காவேரி பாயும் அணிகொள் திருநாடு எங்கள் நாடு. ஏன்? இக்கலிங்கம் அன்று வற்கடத் தால்வாடித் துடித்தபோது, தாயைப்போல் பரிந்துவந்து உணவளித்து, உங்களுக்கெல்லாம் உயிர் ஈந்த நாடு எம் சோணாடு என்பதை எவரும் மறந்திருக்கமுடியாதே!

மாதவன்:— [சினம் பொங்க] நிறுத்து!...உம் புகழ்ப் படலத்தை. எங்கள் நாட்டில் வாட்டம் வந்தபோது, உங்கள்பால்வந்து, எங்களுக்குச் சிறிது அளியுங்கள் என்று நாங்கள் இரக்கவில்லை.

தூதுவன் :— கலிங்கம் வற்றிவறண்டுஒழியட்டும் என்று எம்பேரரசர், கொடைமடங்கொண்ட குலோத்துங்கர் கண்டுகளிக்க இயலாதவர். காரணம்? அவர்பால் கனிவுற்ற இதயம் உண்டு; இரக்கம் என்னும் உயர்பண்பு அதனிடத்து நிரம்பியுளது மேலும், கலிங்கம் சோழப் பேரரசுக்கு உட்பட்ட நாடுதானே? அதனைப் பேணும் பொறுப்பு, சோழரைத் தானே சாரும்?

அனந்த :— (தன் அடியால் நிலத்தை உதைத்து) தூதுவ! போதும் நின் வீண் பேச்சு. கலிங்கம் இனிஒரு கணமும் அடிமையாக வாழாது. கருணாகரன் விடுத்த செய்திக்கு, அ

சன் அனந்தபத்மன் அளித்த மாற்றம் இஃதே. உரிமை இழந்த கலிங்கத்தை உலகில் இனிக் காண்டல் அரிது. சோழனின் அச்சுறுத்தல் எவ்வடிவு பெறினும் அதனை அழிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் கலிங்க மறவர்கள். வாளுருவிப் போர்க்களம் புகுவாராயினும் இனிச் சோழர் எம்மை அடிமைப்படுத்த முடியாது. எம்மாற்றம் இதுவே. நீவிர் செல்லலாம்.

தூது :— நன்று மன்ன! செல்கிறேன். (தூதுவன் அவையினீங்குதல்)

எங்க :— சினந்தெழும் வேந்தே! எரியும் நெருப்பு என அறிந்தும் அதனுள் இடறி விழலாமா? தூங்கும் கொடும் புலியின் வாலைச் சுழற்றி விளையாடல் அழகன்று.

மாத :— வீரத்தை வெளியிட்டு வாகை சூடவேண்டிய வேளையில் 'வேண்டாம்'' எனத் தடுப்பது அமைச்சருக்கு வழக்கமாகப்போயிற்று.

எங்க :— மாதவா! உம் வீரத்தை நாடறியும். நம் படைவலியையும் நானறிவேன். இரண்டையும் நம்பிப் போர்தொடுப்பின், மண் குதிரையை நம்பிக் காட்டாற்றில் இறங்கிய கதைதான் ஆகும். (அமைதியாக அரசனை வணங்கி) வேந்தே! நெறிபிறழ்ந்த மொழிகளை உறுதி வழங்குவனவாகக்கொண்டு முறை நெகிழ்ந்த மறுமொழியைத் தந்தீர்கள். என் நெஞ்சம் கவல்கின்றது. இக் கலிங்கம் தன் அழிவை நோக்கி மெல்ல நழுவிச் செல்கின்றது என்பதை உணர்கின்றேன்.

அனந்த :— எங்கராயரே! நீர் என்றும் அச்சம்கொண்ட கோழை: இதில் தலையிடாதீர்.

எங்க :— மன்ன! பொறுத்தருள்க. வரும் பொருள் கூறவேண்டியவன் அமைச்சனாகிய நான்தானே. கூர்ந்துகருதி, உறுதி பயப்பனவற்றை உரியபொழுதில் எடுத்துரைக்க முன் வந்தேன் இஃது என்தொழில். ஆனால் தடுத்து மொழிகிறீர்கள்; இனி அடுத்து நிகழ்வது போர்தான்.

அனந்த :— மாதவா! நம் படையின் அணிவகுப்பைப் பலப்படுத்துக. பதுங்கியுள்ள வேங்கை எந்நேரத்திலும் நம்மீது பாயலாம். எதற்கும் நாம் விழிப்புடனே இருப்போம்.

மாத :— தங்கள் ஆணை, அரசே! (அனைவரும்கலைதல்)

[காட்சி முடிவு.]

## இயல் 4., காட்சி 2.

உறுப்பினர் :— கருணாகரத் தொண்டைமான்; படைவீரர்கள்.

இடம் :— போர்ப் பாசறை

நிலைமை :— படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் மேடைமீது தோன்றுகிறான்; அணிவகுத்து நிற்கும் நாற்படைப் போர்மறவரும் ஆரவார முழக்கஞ் செய்கின்றனர். கருணாகரனுக்குப் பின்புறம் புலிக்கொடி மேலோங்கிப் பறக்கிறது.

ஒருபடைவீரன் :— சோழப் பேரரசின் மாவீரப் படைத் தலைவர் கருணாகரர்!

வீரரனைவரும் :— வாழ்க!

கருணாகரன் :— சோழப் பேரரசின் தோல்விகாணாப் பெரு வீரர்களே! ஈழம் முதல் விந்தியம்வரை பரவியுள்ள இப் பேரரசினில், இன்றுவரை எதிலார் எவருமின்றி, மக்கள் நலமே பெரிதெனப் போற்றும் நம் மாமுடி வேந்தர் — குலோத்துங்க சோழ தேவரின் ஆணை சென்றது. இன்று நம் மாமன்னரின் ஆணையை மீறத் துணிந்து விட்டான் ஒருவன். கலிங்கக் காவலனாகிய அனந்த பத்ம வர்ம சோட கங்கன் என்பவன்தான் அவன். மன்னர் தம் பிறந்தநாள் விழாவிலே அவன் பங்குபெற்றானில்லை. வேனிற்கால அந்நாளோலக்கத்திலே, செலுத்தற்குரிய திறைப் பொருளையும் தந்தானிலன். இனியும் இக்கலிங்கத்தானை இப்படியே ஒழுகுமாறு விட்டுவைத்தால், அவன்றன் தன் முனைப்புச் செயல் பெருக்கமுறும். 'இளைதாக முள்மரத்தைக் கொல்லவேண்டும்' என்று கூறுகிறது தமிழ்மறை. ஆகவே, அவன்மீது போர் தொடுப்பதென முடிவு கட்டிவிட்டார் நம் பேரரசப்பெருமான். எனவே, வெற்றி முழக்கஞ்செய் வீரர்களே! வீறுகொண்டெழுங்கள்.

ஒரு படைவீரன் :— பேரரசர் திரிபுவனச் சக்கரவர்த்தி, குலோத்துங்க சோழ தேவர்!

வீரரனைவரும் :— வாழ்க!

கருணாகரத் தொண்டைமான் :— மாவீரர்களே! செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் சிறந்த வாய்ப்பு உங்களுக்கு அண்மையில் வந்துள்ளது. நாட்டுப் பற்றை ஊட்டிவளர்த்த சோழ அன்னைக்கு உங்கள் செய்நன்றிகொல்லா வுணர்வினைக் காட்டுங் காலம் கடுகிவருகின்றது. வேட்டைமீது நாட்டங் கொண்ட காட்டுப் புலியெனக் கலிங்கத்தின்மீது பாயுங்கள். கலிங்கத்தானின் காட்டரணைச் சாடி ஒழியுங்கள்: ஆழ்ந்தகன்ற அகழிகளைத் தூர்த்துவிடுங்கள். வாள்கொண்டு, எதிர்ப்போரின் தோள்வேறு தலை வேறாகத் துண்டித்து வீழ்த்துங்கள்: வேற்படை வீசி வருவார் தம் தாள், தலையிற் படும்படி உங்கள் வீறுகொண்ட செயலால் விரட்டுங்கள்: கலிங்கத்தானின் மலையானைப் பொடிப்பொடியாகத் தகர்த்திடுங்கள்: கொடியாடும் அவன்றன் நெடுமதிலைக் குன்றுநிகர்யானைப் படை குத்திப் பெயர்க்கட்டும்: நம் குதிரைகளின் குளம்படிகள் எதிரிகளின் தலைகளை இடறட்டும்: தேர்க் காலில் சிக்குண்டு நம் மாற்றார் தம் உடல்கள் நசுங்கிச் சிதையட்டும். எழுச்சி குன்றாது எழுக, வீரர்காள், எழுக!

ஒரு படைவீரன் :— காலனும் அஞ்சக் கடுஞ்சமர் ஆற்றும் நம்படைத் தலைவர், கருணாகரர்!

வீரரனைவரும் :— வாழ்க!

கருணாகரன் :— சிங்கேற்றுக் குருளை எனச் சினந்து நிற்கும் வீரர்களே! பகைவரின் ஊர்களைத் தீயினுக்கு இரையாக்கிடுங்கள்; விண்ணுயர்ந்த மாளிகை வெற்றிடம் ஆகட்டும். மண்வளம் அழியும்படி நிலத்தில் வெள்வரகை விதையுங்கள். பகைவரின் பாசறை வில்லாலும் வேலாலும் வேலிகோலப் பெறட்டும். வெற்றிகாணும்வரை விழித்த இமைகளை மூடாதீர்கள்: போர்க்களத்திற் சிக்கியவர் தம்மைச் சிறைப்படுத்துங்கள்: தப்பியோட முயல்பவர்களைக் கண்டதுண்டமாக்குக: அன்னவர் உடலைக் கழுகுக் கிரையிடுக: பகைவர் குறையுடலை நரிகள் பற்றிச் சுவைக்கட்டும். இந்நாள்வரை எங்கும் காண்டற்கரிய அழிவு மிகும் சாக்காடு கலிங்கத்திலே உருவாகட்டும். கலிங்கத்தான் இனி என்றும் தலைதூக்க இயலாது என்பதனை அவன் உணரட்டும். வெற்றிகாணத் தோள்தட்டும் வீரர்களே! ஒன்று மட்டும் நன்றாக உங்கள் நெஞ்சத்துள் கொள்ளுங்கள். போர் அறம் தவறா நெறியில் உங்கள் வீரச் செயல்களைத் தொடங்குங்கள்! இப்போது யாவரும், வாளுருவிச் சூளுரை செய்யுங்கள். [கருணாகரன் தன் வாளை ஒளிதிகழ உயர்த்துகின்றான்: படை வீரரனைவரும்அவனைப்போலவே தம்வாட்களை உயர்த்துகின்றனர்] எம் உடலில்

ஒருதுளிக் குருதி உள்ளவரையிலும் சோழப் பேரரசுக்காகச் செயலாற்றத் தயங்கமாட்டோம் : எம் சோணுட்டுக்காக எம் ஆவியையும் உவந்துதருவோம் : இஃது எம் அன்னையர்மீது ஆணை !

ஒரு படைவீரன் :— பார் நடுங்கப் போர்நடத்தும் படைத் தலைவர் கருணுகரர்!

வீரரனைவரும் :— வாழ்க, வாழ்கவே!

[காட்சி முடிவு]

## இயல் 4 , காட்சி 3.

உறுப்பினர் :— கலிங்கவேந்தன் அனந்த வர்மன், எங்கராயர், மாதவன், ஒற்றன்.

இடம் :-- தனி அறை

நிலைமை :— கலிங்கவேந்தன் சிந்தனையுடன் தன் அறையுள் குறுக்கும் நெடுக்குமாக உலாவுகிருன். எங்கராயரும் மாதவனும் இருபுறமும் நிற்கின்றனர். அப்போது பதைப்புடன் ஒற்றன் ஒருவன் நுழைகின்ருன்.

ஒற்றன் :— [வணங்குகிறுன்] வாழி! எம் கலிங்கக்காவல, வாழி! வாழி !! சோழநாட்டான் தன் வேழப் படையொடு நம் நாட்டின் எல்லையையணுகி வந்துவிட்டனன்.

வேந்தன் .— அப்படியா !......மாதவா! நம் படைகளுடன் எல்லைப்புறம் நோக்கி விரைந்து செல்க! மாற்ருன் படை ஓரடியும் மேற்செல்லவொட்டாமல் தடுத்து நிறுத்துக. நாட்டினுள் நுழையவிடாதீர்.

எங்க :— பெரும! நம் மற்ற நான்கு படைத் தலைவர்கள் தலைமையிலும் படைகளையனுப்பி, நான்குபுறத்திலிருந்தும் சோழர் படைகளைத் தாக்கி அழித்தல் நன்று.

வேந் :— ஆம் அமைச்சரே! இது நல்ல கருத்தே, மாதவ! நம் அமைச்சர் கூறியதையும் மனத்திற்கொண்டு படைகளை அணிவகுத்தல் நன்று. அப்போதுதான் எதிரிகளை எளிதில் புறமுதுகிட்டோட்டலாம்.

படைத் தலைவன் :— தங்கள் ஆணைப்படியே, பெரும! [மாதவன் வணங்கி நீங்குதல்]

வேந் :— ஒற்ற! படையைச் செலுத்துவது யார் என அறிவாயா?

ஒற்றன் :— கருணுகரத் தொண்டைமான், பெரும!

வேந் :— வண்டினுக்கு மதங்கொடுக்கும் திசையானை அபயற்கு அன்றி அவன்விட்ட தண்டினுக்கும் எளியன் அல்லேன் யான். கான்அரணும் மலையரணும் கடலரணும் கொண்டது இக்கலிங்கமண், என்பதறியாது நம்முடன் அத்தானை மோத வருகின்றதுபோலும்!

எங்க :— அரசே! சோழர் தம்தடை கடப்பதற்குக் குலோத்துங்கனின் படையொன்றே போதும்.

வேந் :— அமைச்சரே! என்ன கூறுகின்றீர்?

எங்க :— மன்ன! அன்று குலோத்துங்கன் விட்ட தண்டினால் மீனவர் ஐவரும் படாதபாடு பட்டனர். சேரர் புறமுதுகிட்டனர். வேலைகொண்டு விழிஞம் அழித்ததும், காந்தளூர்ச்சாலை கொண்டதும் அவன் படையே. மாறுபட்டெழுந்த வத்தநாட்டரசன் தாராவர்ஷன் ஊறுபெற்றதும் அவன்றன் தானைகளாலே! களத்தோடு அன்று அளத்திநகர்பட்டதும் கண்டநாயகர் காக்கும் நவிலையில் ஆயிரம் குஞ்சரம் கொண்டதும் அவன் சேனைகளாலே. அச் சேனையுடன் குலோத்துங்கனின் சக்கரம்போன்ற கருணாகரனே வருகின்றான். ஆகவே நாம் அவனை அவ்வளவு எளிதாக எண்ணுதல் கூடாது. நம் வலிமை அனைத்தையும் ஒன்று திரட்டிச் சோழர் படையை எதிர்த்துச் சாடல்வேண்டும்.

வேந் :— எங்கராயரே! இளஞ் சிங்கக் குருளை என்பதால் யானை அதை வென்று விடுமோ? இப்பாரே ஒன்றுகூடி எதிர்க்கினும் ஒரு பகல் எல்லையில் அனைத்தையும் அழித்து வெற்றி நடம்புரியும் ஆற்றல் வாய்ந்தவன் இந்த அனந்தவர்மன் என்பதை நீவிர் தெளியத்தான் போகிறீர்.

எங்க :— கலிங்கத்தார் ஆற்றலிற் குறைந்தவரல்லர் என்பதை மாற்றலர்க்கு நாம் காட்டவேண்டும். மலைகலங்கினும் நிலைகலங்காச் செயன்மறவர் கலிங்கத்தார் என்பதைச் சோழர்கட்கு உணர்த்த வேண்டும். வீர மறவர் தம் நெஞ்சுறுதியின் முன் ஆண்டு பலவாகப் பிணிக்கப்பெற்ற, கலிங்கத்தின் அடிமைத்தளை பொடிப் பொடியாகச் சிதற வேண்டும். அந்த ஆர்வத்தோடு நாம் வீறுகொண்டெழுவோம்; வெஞ்சமர்க்களம் செல்வோம்; விளைவினைப்பற்றிக் கருதாது வீரத்துடன் போரிடுவோம்....அதோ, போர்முரசம் ஒலிக்கின்றது. வாருங்கள், செல்வோம்.

(காட்சி முடிவு)

# மொழி, நம் விழி.

சு. சிவஞானம் [தமிழ், கணக்கு]

1. தண்டமிழ்க்குத் தொண்டாற்றி நின்றான் காளை
தணிப்பறியாத் துன்பம்பல ஏற்று நின்று
விண்டொழிந்து போகாமற் காக்க வெண்ணி
விழைந்திட்டான் றாய்தமிழின் ஏற்றம் பேச!
கண்டிகழ்ந்து பேசிடுவோர் கலங்கி நோக்கக்
கருத்தற்ற செயல்புரிவோர் வெட்கி நாணப்
பண்டிருந்த நாற்பெருமை எடுத்துக் கூறப்
பகர்ந்தனனே 'விழிநமது மொழி'யாம் என்றே!

2. 'தூய்தமிழிற் பேசுதலா லேற்றங் கிட்டுந்
துவளாது இக்கொள்கை மேற்கொள் வீரே!
ஆய்கலைகள் நற்றமிழ்க்கு அமைந்தாற் போன்று
அடுத்துள்ள மொழிகளிலே இல்லை; காண்பீர்!
பேய்மனத்தை விட்டொழித்து நற்றொண் டாற்றிப்
பிறங்கிடுவீர்; செயற்புகுவீர் தமிழைக் காக்க!
காய்களையே சுவைத்திடநீர் முற்ப டாது
கனிசுவைக்க முற்படுவீர் தமிழ்ப்பண் பாட்டால்!

3. கனிபோன்று சுவையளிக்கும் அமிழ்தம் என்பார்
கலைவளரும் தமிழ்மொழியைச் சுவைத்த சான்றோர்!
இனிதான தமிழ்மொழிக்கு அமிழ்தம் எங்கே
ஈடாகும் என்றுரைப்பார் தெளிந்து நோக்கின்!
முனிந்தார்த்து விரட்டாது வாழ்வார் யாரே
முட்புதராம் மொழிக்களைகள் நுழையும் போது!
பணிவோடு கேட்கின்றேன் தமிழ மக்காள்
பாரினிலே நம்பெருமை எடுத்துக் காட்ட!

4. வற்றுமொழிச் சொற்கள்தமைக் கலந்து பேசி
வேரோடு தமிழறுப்பு நடத்த லாமா?
எற்றமிகு நம்பெருமை தூற்றக் கண்டும்
எழுசினத்தை அடக்கிவைத்தல் ஏற்ற தாமோ?
ஆற்றல்நமை அணைந்திருக்க உணர்வு போகி
அமைதியுடன் இருப்பதனாற் பயன் தான் என்னே?
சீற்றமிகு மறத்தமிழா சினமேற் கொள்வாய்!
சிறந்ததமிழ்! 'மொழிநமது விழி'யா யிற்றே!

5. கண்போன்று சிறந்ததொரு உறுப்பு மில்லை!
காண்பதெலாம் உண்மையென் றநிலையு மில்லை!
தண்ணளியாந் தமிழ்மொழிக்கு ஒப்பு நோக்குந்
தகைகொண்ட இயன்மொழிகள் எங்கு மில்லை!
எண்ணமெலாம் ஆற்றொழுக்காய் அமையும் நல்ல
ஏற்றமிகு ஒப்புமொழி எதுவு மில்லை!
கண்காக்க விழைகதுபோல் மொழியைப் பேணிக்
காத்திடுவீர் 'மொழிநமது விழி'யா யிற்றே!

# அறிவும் பண்பும்.

மா. மாணிக்கம் B. A., ஆங்கிலமும் சமூக நூலும்.

எண்ணற்கரிய உயிரினங்களும், பல்லாயிரக் கணக்கான பொருள்வகைகளும் நிறைந்துள்ள கலைக்கூடமாகத் திகழ்கிறது இவ்வுலகம். இத னூடே, விலங்கினத்தோடு விலங்கினமாக வாழ்வு நடாத்திய மக்களினத்தில் முன்னேற்றம் அரும்பித் தழைத்தது. மனிதன் தன் பகுத் தறிவின் துணைக்கொண்டு மற்ற உயிரினங்களி லும் மேம்பட்டு விளங்கினான். பழங்களையும் கிழங்குகளையும் உண்டுவந்தவன், நிலத்தை உழுது பயிர்செய்யக் கற்றுக்கொண்டான். குடி யிருந்த குகைகளும் மரக்கிளைகளும் அழகிய வீடுகளாக மாறின; உடலை மறைத்த மரப் பட்டைகளும் அகன்ற இலைகளும் எழில்மிக்க ஆடைகளாக உருப்பெற்றன. மக்கள் மனத்தில் உணர்வைத் தூண்டிப் பேரின்பத்தில் ஆழ்த்தும் இசை, நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற கலை கள் தோன்றின. இவையல்லாமல், இயற்கை யின் படைப்புகளோடு போராடி, அவற்றைத் தனக்குப் பயன்படும் கருவிகளாக மாற்றவும் கற் றுக்கொண்டான். விண்ஊர்திகள், வானொலி, தொலைக் காட்சி, தொலைபேசி போன்றவை அவன் அறிவுக்கு எடுத்துக்காட்டுகளாய்த் திகழ் கின்றன. அவற்றின் பயனாய் உலகம் மிகவும் குறுகி வருகிறது. இன்றைய நாடுகள் விண் ணில் இயங்கும் கோள்களுக்குப் பாதையமைக்கப் போட்டியிடுகின்றன. இவ்வாறு மனித அறிவு படிப்படியே வளர்ந்துவருவதை நன்கு காண் கிறோம்.

இயற்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஒருவரை யறைக்குட்பட்டே இயங்கிவருகின்றது. வரம்பி லிருந்து பிறழுமாயின் குழப்பம் ஏற்பட்டுவிடும். வான வீதியில் உலவும் கோள்கள் வழி மாறினால், அவை ஒன்றோடொன்று மோதி அழிவுறும். அதுபோன்றே, முன்னேற்றமடைந்துவரும் மனித அறிவுக்கும் குறிப்பிட்ட எல்லை அமைதல் வேண்டும். இன்றேல் அது பாழ்படும். இதனை நன்குணர்ந்த வள்ளுவப் பெருந்தகையார்,

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு

—என்று கூறுகிறார்.

'எப் பொருளாயினும் எத்தகையோரிடமிருந்து கேட்டாலும் அறிவென்னும் உரைகல்லிலே தேய்த்து அதன் உண்மைப் பொருளை உணர வேண்டும்.' அவ்வாறு ஆயும் மனம் தீமையை நாடிச் செல்லவுங்கூடும். தீமையின்பாற்செலுத் தும் அறிவு மக்களின் நலத்தைக் கெடுக்குமாத லால், அதற்கு வரம்பு ஏற்படுத்துகிறார்.

'மனம் செல்லுமிடமெல்லாம் அறிவைச் செலுத்தாமல், தீமைகளை அகற்றி நன்மை பயக் கும் வினைகளிற் செலுத்துவதையே அறிவு'— என்று கூறுகிறார். வள்ளுவரின் இக்கருத்தை மனத்திற்கொண்டு நோக்கினால், அறிவின் விளை வுகளாக விளங்கும் அணுகுண்டுபோன்ற அழி வுக் கருவிகளை ஆக்கிய அறிவை 'அறிவு' என்று கூறுதல் தகுமா என்ற ஐயம் ஏற்படுகிறது. மேலும்,

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

—என்றகுறளின்

கருத்தினை எண்ணுங்கால், 'இரோசிமா,' 'நாக சாக்கி' யில் உயிர்கள் துடிதுடித்து நசிந்தமைக் குக் காரணமாயமைந்த அறிவுடையோரை 'மக் கட் பண்புடையோர்' எனல் முறையாகுமா?

அறிவுவளர்ச்சி, தீமையொன்றையே குறிக் கோளாகக்கொண்டு இயங்குமானால் உலகம் விரை வில் அழிவுறும் என்பது திண்ணம். இன்றைய உலகில் நாடுகளுக்கிடையே தோன்றும் பூசல் களையும், அழிவுக் கருவிகளை உருவாக்க எற்படும் போட்டிகளையும் நோக்கும்போது, மனித அறிவு அழிவை நோக்கி விரைவது புலப்படுகிறது.

மனிதன் மனிதனாக வாழவேண்டுமாயின் நன்றின்பால் உய்க்கும் அறிவோடு பண்பும் இயைந்து வரவேண்டும். அறிவுடையோரிடைப் பண்பெனும் அருங்குணம் அமையாவிடில் அவ் வறிவு பயனற்றுவிடுகிறது. பண்பின் சிறப் புணர்ந்த வள்ளுவர்,

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

—என்று கூறுகிறார்.

'பண்புடையார் இருப்பதாலேதான் உலகு நிலைத்திருக்கிறது; அவரின்றேல் உலகு அழிந்துவிடும்' என்பது தெளிவாகிறது. கல்வியின் சிறப்பைக் கூறுமிடத்தும் 'மக்கட்குக் கண் போன்றது' என்றும், அழிவு இல்லாத செல்வம் என்றும் கூறினாரேயன்றி, உலகம் நிலைபெறுவதற்குக் காரணமாகக் கூறவில்லை. "உண்டாலம்ம இவ்வுலகம்...."[2] என்ற புறநானூற்றுப் பாடலின் அடியும் இக்கருத்தை வலியுறுத்துகிறது. இவற்றால் பண்புடைமையின் சிறப்பு விளங்குகிறது.

நம் நூற்றாண்டிலே வாழ்ந்த, அறிவுலக மேதையென அனைவராலும் போற்றப்பட்ட ஐன்சுடீன், "மதம் இல்லாத அறிவியல் முடமானது; அறிவியல் இல்லாத மதம் குருடானது.[3]" என்று கூறுகிறார். இங்கே அறிவியல் என்பதை அறிவாகவும், 'மதம்'[5] என்பதைப் பண்பாகவும் பொருள்கொள்ளலாம். அறிவின் விளைவால் அமைந்ததே அறிவியல். மதம் அல்லது சமயம் பண்பை வளர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. அன்பு, ஒழுக்கம், பொறுமை, பணிவு போன்ற நற்குணங்களை ஒருங்கேகொண்டது பண்பு. அவரது கூற்றின்படி, அறிவும் பண்பும் இயைந்து இருந்தால்தான் மக்கள் சமுதாயத்திற்குப் பயன்விளையும்.

நந்தமிழ் மொழியிற் பண்பாட்டை வளர்க்கும் திருமுறை நூல்கள் பலவற்றைக் காண்கிறோம். கற்போர் மனம் கரைந்துருகும் 'திருவாசகம்,' மருள் நீக்கும் 'அருட்பா' போன்ற நூல்களைப் படிக்கும்போது நம் மனம் தூய்மையடைந்து நன்மையை நாடுகிறது.

அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவாசகத்தின் இப் பாடலைப் படிப்போ... திற் பண்பன்றி வேறு என்ன இடம்பெ... லும்? இறை வழிபாடு மனத்தில் நல்லெண்ணங்களை ஏற்படுத்தும் கருவியாகக் கொள்ளப்படுகிறது.

அப்பாநான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெலாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்க...
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்திடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவ...

அருட்சோதி வள்ளலாரின் இப் பாடல் ம... தூய்மைக்கும், நல்லெண்ணத்திற்கும் வித்... அமையாது என்று கூறுவாருளரோ? அ... நெறியைப் புகட்டும் இப் பாடல்களைப் படிக்... உள்ளம் தீமையை நாடுமோ?

அறிவோடு இவ்வரிய பண்புள்ள... இணைந்தால் மக்களினம் சிறப்பெய்துவதில் என்... தடையிருக்கவியலும்!

"சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

1. Television 2. புறம்—182. 3. "Science without religion is lame, religion without science is blind." 4. Science. 5. Religion.

—o—

# "இளமையில் வறுமை"

வித்வான் டி. கே. சௌரிராசன்.

1. பூங்குழற் கயற்கண் சான்ற
பூவையை மணந்தே பாரில்
தேங்கெழிற் றலங்கள் தோறும்
"தேன்மதி" யுலவ வெண்ணி
ஏங்கியே பணப்பை பார்த்தேன்
ஏழையேன் நிலையைத் தேர்ந்தேன்
ஈங்கிந்தத் துயரந் தந்த
"இளமையில் வறுமை" நொந்தேன்.

2. என்னெழிற் புதல்வன் வந்தே
என்கையைப் பற்றி ஈர்த்துத்
தன்னரும் மழலைச் சொல்லால்
"தந்திடு பொம்மை யொன்றே"
என்றுரைத் தழுதே நிற்க
என்பொறை நீத்தென் கையால்
இன்முது கடிக்கச் செய்த
இளமையில் வறுமை நொந்தேன்.

3. உலகினிற் பிறந்தோ ரின்பம்
உவந்துளந் துய்க்க வேண்டி
இலகிடு மிளமை தன்னில்
இன்பொரு விருப்பின் நன்றும்
இலையெனி விளமை கண்ட
இன்மைசேர் வறுமை தானும்
கொலைசெயுங் கூற்றின் மிக்கக்
கொடியதாய் வருத்துங் காணீர்.

# சிறு துளி.

(பா. பொன்னப்பன், தமிழ்ப் பேராசிரியர்.)

"**சி**றுதுளி பெருவெள்ளம்" என்ப. "மகன் உரைக்குந் தந்தையறிவு" என்ப. "ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்" என்ப. இவை போன்றே ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் அம் மொழியை வளர்த்தவர் தம் பண்பாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பினை அம் மொழிக்கண் அமைந்தவொரு மரபுகண்டு தெளியலாம்.

முதன்முதலிலே மக்கள் எவ்வகைச் சொற்களை ஆக்கினர்? ஆக்கியிருத்தல் வேண்டும்? முதன்முதலிலே கண்ணுற்கண்ட பொருள்களுக்கே பெயரிட்டிருத்தல்வேண்டும். அதன் பின் அப் பெயர்ச்சொற்களே வினைச்சொற்களுக்கும் வினைப்பெயர் அல்லது தொழிற்பெயர்கட்கும் பொருளாகி முடிவாக நுண்பொருள்கட்கும் பண்புப்பெயர்கட்கும் பொருளாக அமைந்தன எனக் காண்கின்றோம். என்னை?

தமிழர் அருந்தும் முப்பால்தரும் தமிழ் மறையாம் திருக்குறளமுதைச் சுவைத்தோர் பெற்றபயன் முக்கனிகளின் பிழிவுகளாகிய அறம் பொருள் இன்பங்களேயாம். அவற்றுள்,

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

"இல்லறமல்லது நல்லறமன்று"

என்றார் ஔவை மூதாட்டியார். ஆகவே தமிழர் அறம் என மதித்தது இல்லறமே. இவ்வில்லறத்தே ஐம்புலவின்பங்களையும் ஆரத்துய்த்துக் கல்வித்துறை கடந்தவொரு நம்பியே தன் முதுமையிலே "ஆன்றவிந்து அடங்கிய கொள்கை"ச் சான்றோனாகத் திகழ்கின்றான். தன் அன்பு மனையாளோடு வீட்டினுள்ளிருந்து வருவோர்க்கெல்லாம் வாரிவழங்கி விருந்திட்ட செம்மல் அதே மனையாளோடும் வீட்டை விட்டு வெளியேறித் தனது தெருமக்கட்கும் தன்னூர்மக்கட்கும் அவ்வப்பொழுது நேரும் இடுக்கண்களைவதும், உற்றுழியுதவலும், பிணி தீர்த்தலும், இழந்தோர்க்கு இன்சொற்கூறலும் இன்னபிற சமூகப் பணிகளிலே தனது உடலையும் பொருளையும் உயிரையுங்கூடத் தந்துதவும் பெருநெறியிற்சென்று வாழ்ந்து வாழ்வாங்கு வாழ் பயனையும் பெறுகின்றான். இதனையே தொல்காப்பியர்,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இல்லற இன்பத்தின் எல்லைகண்ட தாய்தந்தை அவையத்து முந்தியிருக்கும் மக்களோடும் அ நெஞ்சினராகியசுற்றத்தாரோடும்சேர்ந்துவாழ் கொண்டு சமூகத்தார்க்குரிய நற்பணிகளை செய்வதே தமிழர் "துறவு" என்பதற் கொண்டபொருள் என்பது வெளிப்படை. இ ஙையே சமயக் கணக்கர் திருமூலரும்

"அஞ்சும் அடக்கு அடக்கென்பார் அறிவில்
அஞ்சும் அடக்கின அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கின் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே"

என அருளிச் செய்துள்ளார். ஆகவே தமி மரபின் வழி "துறவு" என்பது தமது ஐம் இன்பங்களை ஆரத்துய்த்து அடங்கிய நிலை சமூகநல நாட்டங்கொண்டு தன்னில்லப்பற்றை துறப்பதே தவிர வீட்டைத் துறந்து காட்டிற்கு செல்லுதல் அன்று என்று தெளிந்தோம்.

ஆதலால் தமிழனுக்கு வீடு என்பது க மண் செம்மண் அல்லது கருங்கல் செங்கல் சு ணம் ஆகியவற்றாலாகிய வீடேயன்றி வே வீடன்று. இவ்வுண்மையை நாட்டில் வழ வரும் எளிய சொற்கள் வழிக்காணலாம். செ கற் கருங்கற்களாலாகிய வீட்டினைப் பெற எளிதெனச் சிலர் கருதலாம். ஆயின் அ அத்துணை எளிதன்று என்பதே நாம் எடுத் கொண்ட கோளாகும். 'இது என் வீ என்ற பெருமிதத்துடனும் தகுதியுடனும் க கூடிய உரிமை ஒழுக்கத்தால் உயர்ந்தோர்க் இயலும். எவ்வாறு?

ஒரு வீட்டினுள்ளே நாம் செல்வத முன் நாம் கடந்து செல்லவேண்டியவை யா

என்பதனைச் சில எளிய சொற்களின் வழி அறியலாம். வீட்டின் முன் முதலில் நாம் ஏறுவது 'படி'; படிகளைக் கடந்து சென்று நிற்பது நடை; நடை மிதித்துக் காண்பது வீட்டின் வாயில் 'நிலை' அதாவது கதவு நிலை; அதையுந் தாண்டி உள்ளே சென்றால் நாம் இருப்பது காண்பது எல்லாமே 'வீடு' தான்.

இப்பொழுது வரிசையாகப் **படி, நடை, நிலை, வீடு** என்பவற்றைப் படிப்படியாகக் காண்போம். இவை நான்கும் கண்களாற் காணக் கூடியவை ஆகவே இவை பருப்பொருள்கள். மக்களது அறிவும் பண்பாடும் உயர உயரப் பருப்பொருள்களை உணர்த்தும் இச் சொற்களுக்கே நுண்பொருள்களும் மெல்லமெல்ல வந்து அமையலாயின. எவ்வாறு?

**'படி'** என்ற சொல்லை முதலில் எடுத்துக் கொள்வோம். இச் சொல்லுக்குப் பொருள் முதலில் ஏறும் 'படி'; பின் அளக்கும் 'படி'; பின் வரும் 'படி'. இவற்றின் பின், உள்ள'படி,' விட்ட'படி' நினைத்த'படி' என்பனவும் 'பட்டாங்கில் உள்ளபடி' எனவுங்காண்கின்றோம். அடுத்துப் பெயர்ப்பொருள் மறைந்து வினைப்பொருள் பெறுங்கால் 'அடியாத மாடு படியாது' என்ற பழமொழியிலே வீட்டிற்கு வருவோர் போவோரை முதன்முதலில் வரவேற்று வணங்கி மேலே ஏறிச் செல்லவும் மீண்டும் இறங்கி செல்லவும் இடங்கொடுத்து நிற்கும் வாயிற்படி போல, மாடுபடிதலாவது அடங்கி யொடுங்கி நடத்தல் என்ற வினைப்பொருளிலே வருகின்றது. இதுவே பின்னர், நூலை அல்லது சுவடியைப் படி என்றபொருளைப் பெற்றது. இதன் வெண்பொருள் 'கற்க' எனவமையினும் நுண்பொருள்,

'கற்க கசடற கற்பவை'

என்ற வாக்கினிலடங்கி நிற்கின்றது. அதாவது 'படித்தற்குரியனவற்றை மட்டும் படி' என்பதே அதன் கருத்து, அதுவும் 'ஐயந்திரிபு அறப்படி' எனவுமாம். ஐயமாவது தெளிவின்மை. இருட்டிலோ அல்லது மருண்மாலையிலோ தொலைவிலுள்ளதோர் பொருளைக்கண்டு 'அது கயிறோ அல்லது பாம்போ?' என்று தெளிவில்லாமல் விழிக்கும் நிலையே ஐயநிலையாகும். இதனையே இருதலையாய நிலை என்ப. கயிறு அல்லது பாம்பு ஆகிய இரண்டிலே ஒன்றைத் தெளிந்த பொழுது அது ஒருதலையாய நிலை ஆகின்றது திரிபு என்பது கயிற்றைப் பாம்பென்றும் பாம்பைக் கயிறென்றும் தவறாகத் துணிவதேயாம். இவையிரண்டும் அதாவது ஐயம் திரிபு ஆகியவிரண்டும் இன்றித் தெளிவதே வேண்டற்பாலது. அதுவே மெய்யறிவு. இதுவே படிப்பதன் பயன்.

அடுத்த சொல் **'நடை'**. இச் சொல்லின் பொருள் 'படிகளிலே ஏறிச் சென்று முடிந்த பொழுது நிற்கும் இடம்' ஆகும். இப்பெயர் உணர்த்தும் சொல், பின்னர் கால்நடை, உரை நடை முதலியவற்றிலே வினைப்பெயராய் ஆகு பெயராய் மாறியது. பின்னர் மக்களது நடையினையுங் குறிக்கலாயிற்று.

'பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை தெரிவார்ப் பெறின்'

என்றார் பொய்யில் புலவர். அதுபோன்றே ஒருவன் அல்லது ஒருத்தி நடந்துசெல்வதைக் கண்டே அன்னாது உள்ளத்தியக்கங்களைக் காணலாம். அவ்வாறு காணும் ஆற்றலுடைய முதுமகளிரே மணமகளை முதன்முதலிற்கண்டு மணமகனுக்குத் தகுந்தவளா குடும்பவாழ்வு நடாத்தத் தக்க ஏற்றவளா என்பதுபற்றி முடிவுசெய்து வருவர். ஆகவே இந் 'நடை' என்ற சொல் மனமொழி மெய்யாகிய மூன்றும் ஒன்றுபட்டு முன்பு கற்றுத் தெளிந்த சிறந்த நெறியிலே ஒழுகும் ஒழுக்கத்திற்கே உரிய சொல்லாயிற்று.

அடுத்த சொல் **'நிலை'**. முதலில் இதன் பொருள் வாயிற் கதவு நிலை. காட்சிப் பொருளுக்காகிய இச்சொல் பின்னர் உடல்நிலையினையும் மனநிலையினையும் குறித்தது. இதுவே வாழ்க்கையிற் கொள்ளும் கடைப்பிடியினின்றும் வழுவாத உள்ளத்தின் திண்ணிய நிலையினைக் குறிக்கவந்தது. இதனையே,

'கற்றபின் நிற்க அதற்குத் தக'

என்றருளிய மறைப் புலவர், மீண்டும் அதனையே குறித்து

'நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது'

என்று கூறியருளினர். இத்தகைய திண்ணிய நிலையுடையோன் ஒருவனே அறவாழ்வு காத்த அண்ணலாகின்றான்.

இனி '**வீடு**' என்ற சொல்லை எடுப்போம். இச்சொல்லுக்குப் பொருள் முன்னரே கூறப் பெற்றது. கண்ணுற்காணும் இவ்வீட்டை முதலிற் குறித்த இச்சொல் பின்னர்ப் பெயர்ப் பொருளைவிட்டு வினைப்பொருளுக்காகி '**விடு**' என்பதன் முதனீண்டு தொழிற் பெயராகி 'வீடு' என வந்தது, தளைவீடு, சிறை வீடு என்பன அவற்றின் வழியின. இனி இதுவே வீடுபேறு தரும் நிலை. அதாவது துன்பங்களினின்றும் விடுபடும்நிலை குறிக்கலாயிற்று. மேற்கூறியவாறு கற்று [படித்து] நடந்து [கடைப்பிடியிலே] நிலைபெற்றவரே இல்லறம் நடத்தும் வீட்டைத் தமக்குரியாகப் பெறக்கடவரென்பதோடமையாது பெற்றே தீருவர் என்னுங் கருத்துத்தோன்ற

'கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து'

என்றது தமிழ் மறை.

ஆகவே ஈண்டு யாம் கண்ட நான்கு சொற்களும் முதலிலே கொண்ட பொருளும் முடிவாகச் சென்றமைந்த பொருளுமாக நமது நாட்டு மக்களது மொழியும் பண்பாடும் எவ்வாறு பிணைந்து வளர்ந்து வந்துள்ளன என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டாம். ஆகவேதான் இது ஒரு 'சிறு துளி' ஆகின்றது. தனிப்பெரு வெள்ளக் கடலிலே இது ஒரு 'சிறு துளி' வாழ்க தமிழ் மரபு!

# வள்ளுவர் சொல்லமுதம்.

ஓ. கே. தியாகராசன், (கணக்கு–அறிவியல்)

வள்ளுவர் சொல்லினை உள்ளுவமே—நாளும்
நல்லவர் அவ்வழி செல்லுவமே.

தெள்ளிய பண்டைத் தீந்தமி ழதனில்
தெளிவாய் அறமும் பொருளொடு காமம்
அள்ளிய மூன்றையும் அளவாய்க் கலந்து
அவனியர் போற்றுங் குறளினை யீந்த (வள்ளுவர்)

அறமதில் இறைவன் பாயிரந் தொடங்கி
அதையடுத் தாண்பெண் இல்லறம் விளக்கி
மறமதை மாற்றுந் துறவம் போற்றி
மாந்தரின் நினைவில் ஊழையு முட்டிய (வள்ளுவர்)

பொருளதின் மக்கட் பொதுவதின் மேன்மை
பொருந்திய வாழ்க்கை அரசிய லமைய
அருளுடன் வழிகோள் அங்கமும் விரித்து
அவையிடை யில்லா ஒழிபிய லுரைத்த (வள்ளுவர்)

காமத் துயிர்கள் உள்ளது சிறக்குங்
காரணங் கொண்டு கருதிய வகத்தின்
ஏமத் திரண்டாய்க் களவொன் றென்றும்
இருபாற் கியைந்த கற்பு முரைத்த (வள்ளுவர்)

கல்லூரி—பி. டி. மாணவர்களின்

# இன்பச் செலவு.

அ. செங்கோட முதலி, பி. ஏ. [ஆனர்சு]

**ம**க்கள் உள்ளம் இன்புற்றிருக்கவே முயன்று கொண்டுள்ளது. நாம் கண்டறிந்தவை பட்டறிந்தவை முதலாயின நமக்கு நினைக்குந் தொறும் நினைக்குந்தொறும் இன்பந்தருகின்றன. ஆதலின் 'இன்பச் செலவு' (Excursion) நம் வாழ்வில் பல்வகைப் பட்டறிவுகளை நமக்குத் தருகின்றனவெனலாம். இவ்வகையில் நாங்கள் சமூக அறிவியல் மாணவர்கள் சென்றுவந்த செலவைப் பற்றி இங்குக் காண்போம்

குமரபாளையம் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிச் சமூக அறிவியல் மாணவர்களாகிய நாங்கள் [3—1—61] சனவரித் திங்கள் மூன்றாம் நாள் குமரபாளையத்திலிருந்து புறப்பட்டோம். ஏற்காட்டின் இயற்கை எழிலையுந் திருவண்ணாமலையின் தோற்றத்தினையும், நெய்வேலியின் முன்னேற்றத்தினையுங் காணத் திட்டமிட்டு வைத்திருந்தோம்.

எங்கள் பயணம் சனவரித் திங்கள் மூன்றாம் நாட் காலையில் தொடங்கியது. ஏற்காட்டை நோக்கி உந்துவண்டி புறப்பட்டது. சேலத்தைக் கடந்து ஏற்காட்டு மலையுச்சியை நோக்கி உந்துவண்டி சென்றபொழுது நாங்கள் பெருமகிழ்வுற்றோம். இயற்கையன்னையின் எழில் மிகு தோற்றத்தைக் கண்டுகளித்தோம்; கீழே சேலம் நகரம் அமைந்திருந்த நிலையைப் பார்த்து மகிழ்ந்தோம். மலையின் உச்சியை நெருங்கிய பொழுது அங்கு மேகங்கள் சூழ்ந்து பேரெழில் செய்தன அது கண்ட என் உள்ளத்தில்

"மாமயில் கண்டு மகிழ்ந்தாடும்
முகில் ஆர்க்கும் மலைநாடா"

என்ற பாரதிதாசனின் அடிகள் நினைவிற்கு வந்தன மேகங்களைக் கண்டு மயில் ஆடியதன் மர்மம் தெளிவாயிற்று. அப்பொழுது என் மனம் அருணகிரிநாதரின் ஓர் அழகிய பாடலையும் நினைத்தது.

"மஞ்சு தவழ்சாரல் அஞ்சலிய வேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்த சரணாவிந்துமது பாட
வண்டமிழ் விநோதம் அருள்வாயே"

என்றதே அப்பாடல். மஞ்சு தவழ்ந்துவருங் காட்சி கண்ணிற்கும் மனத்திற்கும் மகிழ்வூட்டி யது; கண்டுகளிக்கத் தக்கது.


மலையின் உச்சியில் அமைந்துள்ள (Mon ford School) ஆங்கிலச் சார்பாளர்களின் பள்ளியைச் சென்று கண்டோம். அன்று பள் வேலை செய்யாதிருந்தபொழுதும் அதன் அமை பின் அழகையும், அங்குள்ள மாதா கோவிலின் எழிலையுங் கண்டோம். பின்னர் இயங்கியில் வழியே அப் பகுதிகளைச் சுற்றிவந்து பக உணவை அங்கேயே முடித்துக்கொண்டு திருப் னோம். வழியில் எழில்மிகு ஏரியொன்றுள்ள அங்கு படப் பிடிப்பு நடந்துகொண்டிருந்த எழிலணங்கெனச் "சந்தரா" என்னும் பெய ளுள் குறத்தி வேடமணிந்து நாட்டியமாடி கொண்டிருந்தாள். அழகு படமாக்கிக்கொண் ருந்தனர் அக் காட்சியை; பலர் சூழ்ந்து பார் துக்கொண்டிருந்தனர். நாங்களும் அந்தக் கா சியைக் கண்டு களித்துக்கொண்டிருக்கு பொழுது தலைவர் எங்களை அழைக்குங் கு கேட்டு மனமின்றியே இயங்கியை வந்தடை தோம். பின்னர் நான் இயங்கியில் படுத் தூங்கிவிட்டேன். ஆத்தூர் வந்தபின்னர் தா என் நண்பர் திரு செங்கோடன் என்னை உண உண்ண அழைத்தது தெரிந்தது. இரவுண அத்தூரில் முடித்துக்கொண்டு திருவண் மலையை நோக்கிச் சென்றோம்.

திருவண்ணாமலையினைச் சேர்ந்தபொழு நடுநிசி. அங்கோர் சத்திரத்திற்குச் சென் இரவைக் கழித்தோம். சிலர் சத்திரத்தி சிலர் இயங்கியிலும் உறங்கினோம்.

# EXCURSION : B. T. CLASS, '60 - '61.



At the Montfort School, Yercaud



At Vadalur Temple



At Thiruvannamalai Temple



At Gingee Fort

# P. T. CLASS 1960.



At Thiruchendur Temple



By Gandhi Memorial, Nager Koil


திருவண்ணாமலையிலுள்ள சுடுகாட்டிற்கருகிலுள்ள குளமொன்றில் குளித்தோம். இடுகாட்டையுஞ் சுடுகாட்டையும் பார்த்தபொழுது எனக்குப் புறநானூற்றுக் காட்சிகள் நினைவு வந்தன. சிறு சிறு கல்லெடுப்புகளும் கட்டிடங்களும் இருந்தன. இவை சங்க கால நிலைகளை நினைவுறுத்தின. "என்னை முன் நில்லன்மின் தெவ்விர்" என்று கூறி, "பலர் நின்று கல் நின்றார்" என்பதைக் காட்டிய மங்கையின் உள்ளத்தை வள்ளுவர் கூறுவதும் நினைவிற்கு வந்தது மறத்தற்கரிது.

பின்னர் திருவண்ணாமலைக் கோயிலைச் சுற்றிப் பார்த்தோம்; அதன்கண்ணமைந்த கலையழகுகளைக் காண்போம். இறைவனை வணங்கிப் பின் அங்கிருந்து இருபது கல் தொலைவிலமைந்த சாத்தனூர் அணையினைக் காணப் புறப்பட்டோம். சாத்தனூர் அணை மிகச் சிறியதாயிருப்பினும் அழகான அமைப்புடையது. அங்கமைந்த தோட்டம்—பூங்கா கண்டின்புறத் தக்கதாம். அழகுக் காட்சிகளை அள்ளிப் பருகியபின் திருவண்ணாமலைவந்து செஞ்சியை நோக்கிச் சென்றோம். செஞ்சியின் அமைப்பு வியக்கும் வண்ணமிருந்தது. மூன்று மலைகளையுள்ளடக்கிய பெரிய கோட்டமைப்பு வியப்புத் தந்தது. அங்கமைந்த கோட்டையும், அதனைச் சுற்றி அகழியிருந்ததற்கான குறிப்புக்களையும், கல்யாண மண்டபம், போர்ப் பயிற்சிக் கட்டிடம். மலையுச்சியில் அமைந்த மண்டபங்கள் முதலியனவும் மறக்கமுடியாதன.

செஞ்சியின் தோற்றத்தைக் கண்டு களித்த பின் முதுகுன்றத்தை நோக்கிப் புறப்பட்ட நாங்கள் அன்றிரவு உளுந்தூர்ப்பேட்டையில் அமைந்த பள்ளியிற் கழித்தோம். நாங்கள் மறுநாள் புறப்பட்டு காலை பத்துமணி அளவில் முதுகுன்றத்தை வந்தடைந்தோம். அங்குள்ள முதுகுன்றநாதர் ஆலயத்தைக் கண்டு களித்துப் பின் விரைந்து வளராநிற்கும் நெய்வேலிக்கும் சென்றோம். நிலக்கரி எடுக்க முயன்றுவரும் வேலையைப் பொறியியல் அறிஞரொருவர் விளக்கிக் காட்டிக்கொண்டுவந்தார். சுரங்கத்தை வெட்டும் பொறிகளையும் மண்ணை வெளிக் கொண்டுவந்து கொட்டும் இயந்திரத்தின் எழிலமைப்பினையுங் கண்டு வியந்தோம். உருசியப் பொருளியலறிஞர் கட்டும் மின்சக்தி நிலயத்தையுங் கண்டோம். பணியாளருக்காகக் கட்டப்பட்ட வீடுகளையுங் கண்டு வியந்தவண்ணம் வந்தோம். பின்னர் இராமலிங்க அடிகளார் சோதியில் மறைந்த வடலூருக்குச் சென்றோம். வள்ளலார் ஒளியுடன் கலந்த திருத்தளத்தைக் கண்டு மடத்துட் சென்று அவருடைய பாடல் பல பொறிக்கப்பட்டிருப்பதையும் பிறவற்றையுங் கண்டு பின்னர் ஊர் திரும்பினோம்.

மூன்று நாட்களாகச் செய்த பயணத்தில் நாங்கள் பெரும்பான்மையான கோயில்களையும் இயற்கைக் காட்சிகளையுங் கண்டு ஊர் திரும்பினோம். ஏற்காட்டின் எழிலும், சாத்தனூர் அணையின் அழகும் நெய்வேலியின் உயர் நிலையும் திருவண்ணாமலையின் தோற்றமும் என்றும் மறக்கமுடியாதனவாம். அவ்வின்பக் காட்சிகள் மனக் கண்முன் அடிக்கடி தோன்றி இன்பமூட்டுதலை உடன்வந்தார் எவரும் மறுக்கமாட்டார்.

—(o)—



# குறள் மலர்

ம. கா. சையத்தாசுதீன் — புலவர் பயிற்சி.

[பண் : சாருகேசி] [தாளம் : ஆதி]

தொடுப்பு

வள்ளுவன் குறள்மலர் விரிந்ததடி—வாழ்ந்த
வண்டமிழர் வாழ்வை விரித்ததடி (வள்ளுவன்)

எடுப்பு

தெள்ளிய அறம் பொருள் தீந்தமிழ் இன்பத்தை
திருத்தத் தந்து காத்தார் திரைசூழ் இவ்வையத்தை (வள்ளுவன்)

முடிப்பு

கொள்ளும் கருத்துக்களின் குறைவிலா ஊற்றம்
துள்ளும்குறை நெஞ்சிற்குத் துணிவுள்ள மாற்றம்
உள்ளிய சான்றோரின் உணர்ச்சி கொள் தேற்றம்
தெள்ளியே கடைப் பிடிப்பின் தேறலாம் ஏற்றம் (வள்ளுவன்)

அறிஞரின் உள்ளமாம் சுரும்பினங்கள்—சுற்றி
ஆய்வுப்பண் எழுப்பிடக் கேட்டிடடி
செறிவுறும் இலக்கியப் பேழையடி—கண்ணே
சிந்தை மணக்க வரும் செந்தமிழ்ப் புதையலாம் (வள்ளுவன் குறள் மலர்)

# வாழ்க்கையும் இலக்கியமும்.

ஞா. பிரான்ஸிஸ் துரைராஜ், பீ. ஏ. [ஆங்கிலமும் சமூக பாடமும்]

*[முதற் பரிசுக் கட்டுரை]*

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்......"
யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை—
வெறும் புகழ்ச்சியில்லை...

எனத் தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் பெருமிதத்துடன் பாடியுள்ளார் கவிஞர் பாரதியார். மேலும்

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என வள்ளுவருக்குத் தனிச் சிறப்பளித்துள்ளார்.
தமிழன் தரணிக் களித்த தனிப் பெரும் பரிசு குறளாகும். அதில் நட்பு என்னும் தலைப்பில் வள்ளுவர் கூறுகின்றார் :
"நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

பண்புடையாளர் கிடைத்தற்கு அரியர், அவர்களின் தொடர்பு நம்மைச் சீர்ப்படுத்தும். அத்தகையோர் எப்போதும் எவ்விடத்தும் நமக்குக் கிடைக்கமாட்டார்கள். ஆதலின் சிறந்த இலக்கியங்களே அக் குறையை நீக்க வல்லவை. சிறந்த இலக்கியங்களைப் படிக்கப் படிக்க நாம் மேலும் மேலும் இன்பத்தை நுகர்வதுடன் பல புதுமைகளையும் காண முடிகின்றது. நல்லார் ஒருவரின் துணையால் நாம் அடையும் இன்பம் பயன் ஆகிய இரண்டிற்கும் ஒப்பானது ஒருசிறந்த நூல் எனச் சான்றோர் குறித்தனர். ஆகவே இதன் வழி இலக்கியத்தின் பெருமை தெரியவருகின்றது.

ஜான் பரோ (John Burroughs) என்ற மேனாட்டுக் கவிஞர் "திறமை மிக்க அறிஞர்களின் முதலீடு இலக்கியம். அது வழிவழியாக மக்கள் குலத்திற்குப் பயனளிக்கின்றது" எனக் கூறியுள்ளார். "அடிக்கடி கண்டு நுகர்ந்த சிறந்த நிகழ்ச்சிகளைத் திரட்டி ஏறக்குறைய அதே அளவில் பிறரும் நுகரச் செய்வதே இலக்கியம். அழகான நிகழ்ச்சியை அழகான மொழியில் அழகான நடையிற் சமைப்பதே இலக்கியம்" என அலெக்ஸண்டர் போப் (Alexander Pope) என்னும் ஆங்கிலக் கவிஞர் கூறியுள்ளார். தொன்று தொட்டு வாழ்ந்துவந்த மக்களின் வாழ்க்கையை நிழற்படம்போற் பிடித்து அதற்கு மெருகு கொடுத்து உயிரூட்டி வைத்திருப்பவை தாம் இன்று நாம் நுகர்ந்து இன்புறும் இலக்கியங்கள்.

ஒரு அழகிய மாளிகை கட்டவேண்டுமாயின் அதற்குவேண்டிய செங்கல், சுண்ணாம்பு, மரம், இரும்பு போன்றவை எவ்வாறு முன்னதாகவே அந்த இடத்திற்கு வந்துவிடுகின்றனவோ — அதாவது கொண்டுவரப்படுகின்றனவோ — அதேபோல் இலக்கியம் சமைக்கப்படுவதற்கு முன்னர் அடிப்படையாக மனிதனின் வாழ்க்கையில் ஓர் நிகழ்ச்சி ஏற்படுகின்றது. பிலிப்ஸ் புரூக்ஸ் (Philip's Brookes) என்னும் ஆங்கில எழுத்தாளர் தன் எழுத்தோவியம் ஒன்றில் தீட்டியுள்ள ஓர் கருத்தை இங்கு காண்போம்.

"நாட்டிலே பளபளப்பான சிலைகள் வைக்கப்படுமுன்னே குன்றுகளெல்லாம் பளிங்குக் கற்களால் நிறைந்திருந்தன.

தெருவிலே நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சியொன்று நிகழ்வதாக வைத்துக்கொள்வோம். அங்கே குழுமியுள்ள பலரும் அதைக் காண்கின்றனர். ஆனால் அதை ஒவ்வொருவரும் நோக்கும் முறையிலே பல மாறுபாடுகளைக் காணலாம். அது ஒவ்வொருவருடைய மனத்தையும் ஒரே அளவிலே தொடுவதில்லை. அதைக் காண்பவர்களுடைய வயது, மன நிலை, அனுபவம் போன்ற

பல காரணங்களால் மாறுபடுகிறது. மேலும் அதைத் தான் கண்டு நுகர்ந்த அளவில் பிறரும் நுகரத்தக்கவகையில் அதற்கு ஓர் வடிவம் கொடுக்கக்கூடியவன் கவிஞனே. சிறந்த சொற்களைத் தேர்ந்து எளிய இனிய நடையில் எழுதிப் பலரும் மகிழப் படைக்கும் படைப்புத்தான் இலக்கியம். இது வாழ்க்கையுடன் பின்னியுள்ளது.

"உள்ளத் துள்ளது கவிதை
இன்பம் உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்
உண்மை தெரிந்துரைப்பது கவிதை"

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கருத்து இதை விளக்கும்.

அழகான ஒரு பெண் சிறந்த ஆடை அணிகலன்களால் ஒப்பனை செய்யப்பெற்றுள்ளாள், ஆனால் அவள் முகத்திலே மகிழ்ச்சி இல்லை; களை இல்லை. ஒளி இல்லை. இத்தகைய பெண்ணை அழகாக இருப்பதாக எவ்வாறு கூற முடியும்? ஆனால் அதே முகத்தில் ஓர் புன்னகை ஏற்படுமானால் அது எவ்வளவு அழகாக இருக்கும். இதைப் போலவேதான் ஒரு மொழி எவ்வளவு பரவலாகப் பேசப்படினும், பெருவாரியான மக்களாற் பேசப்படினும் அதற்கு உயிரூட்டக் கூடிய இலக்கியங்கள் இல்லாவிடின் அம்மொழிக்கு எவ்வளவு புறக் கோலங்கள் செய்தாலும் உண்மை அழகு இருக்காது. உயிர் இருக்காது. வளர்ச்சி இருக்காது.

நம் தாய்மொழி பல எதிர்ப்புக்கள், இன்னல்கள், இடையூறுகளுக்கிடையில் இன்றும் தலைநிமிர்ந்து ஏறுநடை போடுகின்றதென்றால் நாம் அடைந்திருக்கும் இலக்கியங்களே அதற்குக் காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மை. தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கையை எதிரொளி வீசுபவை. வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் இருப்பவை. இவற்றிற்குச் சில சான்றுகளைக் காண்போம்.

புறநானூற்றால் பண்டைத் தமிழரின் புற வாழ்க்கை நமக்குத் தெளிவாக விளங்குகின்றது. அரசியல் வேந்தரின் வண்மை, திண்மை, ஒண்மை, உண்மை போன்றவையும், கைம்மை நோன்பு, வடக்கிருத்தல், நடுகல் முதலியவற்றையும் நாம் அறிகின்றோம்.

"கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளிராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்றுமயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇ இப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே"

என்ற பாடலால் வீரத் தாயின் பண்பைக் காண லாம். மேலும் தன் மகன் பெருமையினை அறிந்த தாய் ஒருத்தி ஈன்ற ஞான்றினும் பெரி வந்த நிலையினை விளக்கும் பாடலையும் காணலாம்.

"யாண்டு பலவாக நரையிலவாகுதல் யா காகியர்" என்ற பாடல் நாட்டின் சீரிய நிலையினை யும் உயர்ந்த உள்ளங்களின் இணைப்பையும் சிறந் வீட்டு வாழ்க்கையினையும் காட்டும். இவ் கையே ஒன்றாகக் காட்டும் பரந்த மனப்பா மைக்கு எடுத்துக்காட்டாக "யாதுமூரே யாவரு கேளிர்" என்ற பாடலும் உண்டு.

ஒருவனும் ஒருத்தியும் உணரத்தக்க, வெ யிற் கூறவியலாத உணர்ச்சிகளைக் கூறும் பாட களும் நம் தமிழ் இலக்கியங்களில் பண்பட அமைத்துக் கூறப்பெற்றுள்ளன. இவை அக பாடல்கள் என வருவன. அவற்றுட் சில கா போம்.

"இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணை
கு
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை"......
"துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு" என்ற
குறுந்தொகைப் பாடல்கள் எவ்வாறு தோ ஒருத்தி தன் தலைவியைத் தேற்றினாள் என் தைக் காட்டுகின்றன.

இத்தகைய நிலையில் இலக்கியத்தின் சிறப் அறிந்த நாம் அது வாழ்க்கைக்கு ஓர் வழிகாட் ஊன்றுகோலன்று என்று உணர்ந்தபின் அதை பலரும் பயன்கொள்ளப் பல வழிகள் காண் துடன் பிறமொழி கற்றோர், பிறர் இன்புற உலகம் இன்புற "யான் பெற்ற இன்பம் பெறு இவ் வையகம்" என்ற நல் வாக்கிற்கிணங்க அவைகளைப் பிற மொழிகளில் எழுதல்வேண்டும் அதுமட்டுமின்றி பிற மொழிக் காவியங்கள், இலக்கியங்களை அவைபோன்றே நமது மொழி யிலும் பெயர்த்துத் தமிழுக்குத் தொண்டாற்ற வோம்.

# College Day, 1961.



Principal's Welcome Address



The President Addressing



B. T. Students Who Stage
A Tamil Drama



A Scene From "Dr Faustus"

(Photos : S. Namperumal)

# A GLIMPSE INTO THE STATE OF EDUCATION IN TAMILNAD IN THE DAYS OF THE IMPERIAL CHOLAS.

(By Prof: S. Arumuga Mudaliar M. A., B. O. L., L. T.,)

Chola monarchs, most of them, were scholars enough to patronise pandits and learned men and to provide for the spread of learning in the country. Unfortunately there is no specific reference in the inscriptions to the ways in which the cholas helped the study and spread of Tamil Literature. It would be a great piece of service to the cause of Tamil Literature and education, if at least after patient investigations and research epigraphists and scholars come upon some inscriptions which have parti cular reference to provisions by the enlightened chola monarchs for the spread of Tamil education in the state. The percentage of literacy in the mother tongue or the regional language of the distant chola days just about 800 years ago, should have been very high indeed or at any rate far above the percentage of literacy in the Tamil Nad of to-day.

There were evidently no news papers and government gazettes and bulletins to popularise and make known the public transactions of the King and his Government, the various social activities, charitable and religious endowments of the King. Sales of properties in the village Assemblies, excavation of tanks, laying of roads etc., and these were generally inscribed on the walls of the temples and sometimes in public places on rocks etc, What was the idea behind inscribing them in places of public approach? The sole idea ought to have been, that pupil will read them and understand them, so that the knowledge of these transactions will spread from person to person and from place to place. That incidentally also reveals the high percentage of literacy that prevailed in the land enabling persons to read and understand such transactions from the inscriptions. But it is indeed a pity or irony of fate that in such an enlightened age, there is so far no evidence to prove, the nature and extent of the action taken by the State to spread the literature and culture through the official language of the State, namely, Tamil. We must rest content and feel satisfied that there is more than ample evidence for the spread of Sanskrit language, Literature and education in the State during those days.

We may quote only but three inscriptions, namely, those of (1) Ennayiram inscription of Rajendra I; (2) The Tirubhuvani inscription of Rajadhi Raja I; and (3) The Thirumukkudal inscription of Vira Rajendra, whieh form valuable documents for an understanding of the state of Sanskrit education in those spacious days. Both in Tirubhuvani (Near Pondicherry) and Ennayiram there were Sanskrit Colleges with hostels attached. As many of 72 and 45 Velis of lands respectively were endowed for the maintenance of these institutions. Gangai Konda Chola the enlightened son of Raja Raja I had a particular partiality for Literature and his inscription at Ennayiram Village in the South Arcot District gives an account of the educational activities of the College situated in the temple. The

great halls and corridors of the greatest temples of South India, (though they were lying idle, until recent times, infested with bats and accommulated dirt) and (though some Western critic might think that huge amounts of money and great labour were wasted by the State authorities on these temples) were used used for running colleges and educational institutions and they served definite and laudable purposes. Besides these institutions, we hear of provisions for the chanting of Tevarams and Tiruvaiymoli in the temples also. After some provisions were made in the temple of Ennayiram by Rajendra the grant provides with the rest of the money for the maintenance of an educational institution in the hall called Gangaikonda Cholan Mandapam. There were 340 pupils and 74 professors, on the theoretic side For Rig Veda there were 3 professors, for Yajur, 3, for Chandoga? Sama Veda 1, for Talavakara? Sama Veda 1, Vajasamiya or the white yajur Veda 1, Bodhayaniya Crihya Sutra and Kalpasutra I and for all these subjects there were 230 bachelor pupils. On the secular side of the studies, much importance was laid on the study of Vyakarna, particularly Rupavataram and the Prabakaram. *a mimas*ı work written by Prabakara the disciple of Kumarila Bhatta. There were 40 pupils and one professor for Rupavatara, 25 pupils and one professor for Vyakarna and 35 pupils and I professor for Prabhakaram. For Vedanta there were 10 pupils. All these professors, received their pay in kind in so many Kalams of paddy. Pay was graded according to the importance of the subject and there were payments in cash too—counted in terms of Kalanjus of gold. In Tiru Bhuvani apart from these subjects, Ramayana and Maha. Baratham were also taught. In *Tirumukkudal* a college and a hospital were situated within the temple precincts. The existence of a hospital is also proved by an inscription coming from Koil Tevaranypettai. The latter mentions the foundation of the hospital called Sundara Cholar Adhula Sala at Tanjore by Kundavvai the enlightened sister of Raja Raja. Provision was then made for an efficient staff consisting of a physician and a surgeon, two nurses, two servants to fetch drugs and a servant to be in attendance at the hospital Beds were alro provided for in-patients. There was a stock of medicine for one full year. The various medicinal preparations mentioned in the inscription indicate the high state of medical knowledge in South India in those days.

An inscription at Tiruvorriyur says that Paniniyam was taught by able Pandits in the Vyakarna Dhana Mandapam there. The students were given daily fixed measure of paddy and the teachers were also handsomely paid both in paddy and in gold coins (KalanJu). Even oil was supplied to them for bath and for lamps. At the conclusion of their studies, we are told by the Ennayiram inscription that the students were given a ring each and a gold and silver flower in recognition of their scholarship resembling the conferring of degrees, titles and diplomas with their respective gowns and hoods granted to scholars in convocations of modern universities.

# OUR CITIZENSHIP CAMP.

S. Arumugam B. A. (Hons). English and Social Studies.

Aristotle said that a citizen should be able to take part in the activities of the society and its delibrations. A citizen without sociability even though harmless is useless and also miserable. The aim of a citizen should be to live fully in society.

The best form of training in citizenship can be had in camp life. The camp life is an important curricular programme for a teacher trainee. Our camp was conducted this year within the premises of the Board High School Perundurai, and our thanks are due to the Management for having allowed us to run the camp. The open grounds, the shady trees and a few rooms satisfied our camp requirements We commenced our work with joy and pleasure, and it goes without saying that our camp was a success. Limited water supply in the area helped up to learn the value of adjustability.

The students were divided into four houses and each house was named after the four greatmen of our country namely Nedunchezhian, Rajendran, Kattabomman and Senguttuvan. Each house was divided into two squads and each squad was called after the great poets of the land. The class and the squad leaders were elected. The squad system stimulated individual responsibility and collective work We elected school pupil leader and other ministers who formed the cabinet. Needless then it is to say that our camp was run on democratic lines. Each member had his share of work.

The camp life was so arranged that an all round development could be attained through a fair combination of physical, intellectual and recreational activities. The day began with devo tional songs sung by the Duty squad. Then we had physical exercices which enabled the campers to overcome laziness in the first instance and to get about our routine work in earnestness. Our morning and evening sessions were devoted to the discussions of useful topics under the citizenship scheme These discussions widened our experiences and knowledge. We participated in the recreational activities of the camp life with enthusiasm and vigour.

Notable feature of each day was the morning Assembly and the Flag salutation. All of us attended the Assembly and learnt to sing the National and Flag songs in chorus. Though the campers had been brought up under different environments, they learn to adjust themselves and function as one unit. The co-operative spirit of the campers was developed by the common sharing of what they had. So the law of love and the spirit of comradeship prevailed in our camp life. A sense of co-operative spirit, goodwill, adjustability, responsibility, ability to strive hard-all these, we have developed in our camp life.

Each citizen must be able to shoulder his own responsibilities. The mock parliament helped us to study the Parliamentary procedure and bear in mind the basic principles of democratic work

ing of institutions. We have learnt that good legislation rests on sound understanding of the social problems. Better citizens and better neighbours are the crying need of our country. We had training in first aid, fire fighting, knots and lashings and the knowledge gained will surely help us to become better and useful citizens We had a clear understanding of the Tracking sings and of signalling. We also learnt the Traffic rules and regulations. Friends-in-Council, film shows and camp fires were arranged at night and these formed the entertainment of our camp life. We were given chances to exhibit our histrionic talents.

We had a short but useful excursion to Kasturbagram and Palayakottai Cattle farm. While practising citizenship qualities we also rendered help to the community at large. The campers spent an enjoyable time at Pettampalayam, a village about 5 miles from the camp site. The campers cleared the road leading to Kavundapadi and provided margins on the road by removing the stumps of plants. Later they provided recreation for the villagers by giving them variety entertainment. Our trip to the village was a happy change in our routine work. The Socio-Economic Survey of the Tiruvengadampalayam Village is also done when the campers went out one after-noon for Treasure Hunt.

Last but not the least we learnt co-operation and community life, with love for one another. The feeling of oneness that grew among the seventy-two students is unforgettable ; so is the attitude towards manual labour. Above all let us not forget the emphasis on character building which is the motto of the citizenship training.

"If wealth is lost, nothing is lost,
If health is lost, something is lost,
If character is lost everything is lost."

சித்த முறை தயாரிப்பு.

'அண்ணா' பற்பொடி

பல் சம்மந்தமான
சகல வியாதிகளைக்
கண்டிக்கும்.

'அண்ணா' பெயின்பாம்

கைகால் குடைச்சல், தலைவலி, சளி
இவைகளுக்கு கைகண்ட மருந்து.
வலியுள்ள இடங்களில் நன்றாகத்
தேய்க்க வேண்டும்.

— விவரங்களுக்கு : —

அண்ணா சோடா பேக்டரி,

கடைவீதி, குமாரபாளையம். [வழி] ஈரோடு.

# THE INFLUENCE OF FILMS ON CHILDREN.

*S. Amalraj—English and Social Studies.*

There was a time when people contended that motion pictures at best appealed only to the frivolous and at worst were products of the Devil. The films were sometimes described as the Devil's Instrument. Films were all right within the walls of the Cinema houses, some said, but certainly not for the halls of learning. *A. F. Corwin,* states that in 1929, the pillars of classical education trembled when the University of Southern California included motion picture courses in its curriculam. To-day motion picture is a class-room subject in 970 of the U. S. A's 1800 colleges.

In foreign countries it has long been realised that children's films should be different from films for the adults just as nursery schools, primary schools and so on, are different from schools for other pupils. Children's fiilms should be made on the basis of paychology so that they may have the values of education and entertainment.

To children filmgoing is not a passive type of entertainment; but they, watching a film, participate actively. Dr. K. R. Masani, an authority on the subject of mental health, gives a concrete example:

"A reporter observing children in Winnipeg in January 1951 at a performance of "The Little Ballerina" wrote, they hadno compunction about making a displayof their emotions............"Oh, you dirty wicked thing," shouted out a little girl when the little Ballerina was locked in the dressing room.............. —"Oh, oh the poor little girl!" she mourned when the little Balleriana sobbed.

It is still a disputed matter whether the portrayal of criminal role as such is harmful to children. Many are against such criminal pictures. Yet when children see that crime is not rewarded but punished they may learn a moral.

"The cinema would play the role of scapegoat, and distrust of it would help to hide the causes of a much deeper evil the short comings and faults of education in the family and school". says Henri Stork in his book "The Entertainment Film for Juvenile Audiences"

The reations of children to films vary not only between different age groups, and between boys and girls but also between different children to the same age group. A film which is harmless and good entertainment for one child can be harmful to another. Therefore Dr. Masani suggests that it would be useful to have a discussion led by a mature and trained person, in which not only may some unexpected bad effect on a child be cleared up by ventilation of the conflict or anxiety but some discussion also could be carried out leading to the development of an aesthetic sense and appreciation of good films for subsequent years in adult life.

In a survey in the United Kingdom on what types of films or scenes children dislike and preference they have, 43 boys and 384 girls took part. It w

discovered that 28 percent of boys regard the plot as the essence of the picture while 17 percent of the girls like the well-dressed character, music and dancing. Girls are more susceptible than boys to the logic and the realism of the story.

'Whereas boys much prefer war films about gangsters and detectives, spies and flying,' says Philip Bauchard in 'The Child Audience," "girls retain a certain taste for polished manners and family scenes. The choice of young children is briefly influenced by comic scenes (low comedy) and animal scenes. Heroines with sex appeal are preferred by 11 percent of the boys and 9 percent of the girls."

In the production of films for children it is desirable that the entertainment films should help in the development of their personality and chracter. The Thefilm should solve the common problems which beset them, and the common difficult situation which they have to face. The glorious past and the ambitious future can be unfolded to the children in a manner possible neither in the class-room nor through any written or spoken word.

போன் எண்: 251. தந்தி: ஆர்எஸ்எஸ்.
காஞ்சீபுரம் பட்டு சேலைகளுக்கு
சிறந்த இடம்:
R. S. செங்கோட முதலியார் & கோ.,
6, அக்ரஹார வீதி,
ஈரோடு.

பேன்ஸி ஜவுளிகளுக்கு
ஷண்முகா எம்போரியம்,
ஈரோடு.

பிராஞ்சு: பவானி.
போன் எண்: 33.

நவீன ஷாப் சாமான்களுக்கு
சிறந்த இடம்:

கருணை ஸ்டோர்ஸ்.
ஜெனரல் மர்சென்ட்ஸ்,
குமாரபாளையம்.

# WILD LIFE OUR NATIONAL HERITAGE.

P. Thyagarajan, B. Sc. Mathematics & Science.

Wild life, wherever it is found, is the sole property of the State and it is the most valuable and inexhaustible natural resourse. So the Governments have created a separate branch in their administrative machinery for the administration of wild life. In India we have a very rich and interesting collection of mammals, birds and reptiles. In the matter of preservation and management of wild life, India is far behind the other Countries. It is high time that we realise the value of wild life. To popularise the importance of wild life which is a national asset, the celebration of wild life is the best way

The first week of October is Wild Life Week and the fourth of this month is observed as 'World Day for Animals' On that day dedicated to St. Francis of Assisi the attention of the people is drawn to the injury done to the animals. This would influence people to take active measures to prevent cruelty to animals. Associations like the Society for the prevention of Curelty to animals in India and the voluntary organisations play a useful part in educating people on the need for gentleness and kindness towards our innocent and dumb friends and in bringing cases of cruelty to animals before the courts. In our country, we have a long tradition of 'Ahimsa' stretching back even into the pre-christian era. The law framed today does something towards ameliorating the conditions in which animals work for the benefit of man. But it is the individual's conscience and voluntary effort which help most in transforming an ideal into a reality In token of the protection or national glory and traditional legacy, Nehru says that life would be very dull and colourless if the magnificient and colourful birds will not play with us

Central and State Governments have taken determined efforts and effective steps to conserve fast disappearing animals like the lions and rhinoceros. But poaching still continues on a conderable scale. One cannot appreciate the pleasure of men which they derive when shooting down animals and birds. Senseless slaughter of animals has been known to upset the balance of nature. The Union Minister for Agriculture, Dr. P. Deshmukh has rightly stressed the importance of woodlands which are the main habitat of wild life, Steps have been taken to improve our national game sanctuaries which offer so much delight to tourists Several deer are involved in accidents on roads. Many are found deed in the forest due to malnutrition in winter or depredation by wolves. The wild life is preserved for the recreational and the economic uses and for the aesthetic needs of people in an industrial world. The development of wild life can be had by means of (1) Restriction of hunting, (2) Predator control, (3) Establishment of game reserves, (4) Artificial stocking and (5) Environmental control.

In a continent like Africa, the home of so many wonderful species, fears are being expressed that the Governments of the newly independent

states, in the midst of their many new responsibilities and anxieties, may not realise the importance of preserving wild life. In India we are observing the Wild Life Week for the sixth time and we hope that as in the case of 'Vanamahotsava,' the week would serve to impress upon our people the necessity for a sustained effort to preserve and increase our Wild life. More lions in Gir forest and more rhinoceros in Assam are a national asset as well as national credit. Unless we change our present attitude towards the voiceless denizens and take sufficient care to preserve them, the common animals of today will become the rarities of tomorrow

—O—


# BOOKS ON TEACHING.

**EDUCATION : Some Fundamental Problems,** By A. G. Hughes & E. H Hughes ... ... ... Rs. 11-34

This new book is designed primarily to help students in Training Colleges to think about and discuss some of the perennial philosophical problems of education.

**LEARNING & TEACHING,** By A. G. Hughes and E. H. Hughes Rs. 11-34

This is the third edition (1959) of the well established book, which provides the Training College student with a simple, comprehensive textbook in education and educational psychology.

**EDUCATIONAL PSYCHOLOGY & CHILDREN,** By K. Lovell. Rs. 14-58

Designed for students in University Departments of Education and in Training Colleges, and for practising teachers.

**A NEW DEAL IN SECONDARY EDUCATION,**

By Hans Raj Bhatia. ... ... .... Rs. 6-00

This is a book which should be read with interest by teachers, headmasters, educationists and parents,

**ORIENT LONGMANS,**

**36—A, MOUNT ROAD, MADRAS-2.**

**Also at BOMBAY CALCUTTA, NEW DELHI, HYDERABAD & BANGALORE.**


# Annual Sports - (1961) - C. T. Camp.



Inauguration by the Principal




Sri. T. V. Vasudevan, M. A.,
Arriving to Inaugurate the Camp



March Past



The Campers at Session



Shotput (S. Arumugam)



Mrs. Shanmugasundaram at the Camp

(Photos : S. Namperumal)

# Government Training College, Komarapalayam.

## Physical Education Department 28—2—1961.

# LIST OF PRIZE WINNERS IN SPORTS & GAMES.

| Events | 1st | 2nd | 3rd. |
|---|---|---|---|
| 100 Yds | M- Ramasamy | S. Varadarajan | S. Sadasivam |
| 400 Mts. | A. Palaniappan | P. N Karuppannan | D.Somasundaram |
| 800 Mts. | T. Sithan | Appichi Gounder | — |
| 800 Mts Open to all | R. Rajan | R Narayanan | R Sengamalai |
| Broad jump | S. Varadarajan | T. Sithan | Nallannan K |
| Hop, step and jump | P. N. Karuppannan | A. Palaniappan | — |
| High jump | S. Rajamanickam | M Ramaswamy | P. Sadasivam |
| Shot-put | S. Arumugam | Kaleel Ahmed | T. Sithan |
| Cricket ball throw | P. N Karuppannan | Francis Dorairaj | V. Rasu |
| Javelin throw | M. Ramasamy | K. Somasundaram | N. K Appichi Gounder |
| Three-legged Race | O K. Thiagarajan & M Ramasamy | P. N Karuppannan & D. Somasundaram | — |
| Obstacle race | P. N. Karuppannan | S Varadarajan | — |
| 4X100 Metres relay | Senguttuvan House | Neduzchezhian House | — |
| 100 Yds for peons | Devarajan | Seerangan | — |
| Shotput for staff | Sri.G. Venkatesan | Sri. B. Ponnappna | — |
| Blindman's fancy | Sri. S. Ponnappan | Sri. Murugannan | Sri. Rathnam |
| 100 Yds for staff | Sri. V K Ponnuswamy | Sri. K Sivamani | — |
| Ring throw for staff | Sri. K. Subramaniam | 1. Sri K Sivamani 2. Sri. S. Palaniswamy | — |

## GAMES

1. Volley ball — Nedunzchezhian House
2. Badminton — —do—
3. Basket ball — Senguttuvan House
4. Badminton (Doubles) — 1. S. T Naterajan and 2. Uthamappan
5. Tenikoit— — 1. D. Somasundaram 2. N. Sundaresan

Championship in sports— Senguttuvan House— 63 points

Overall Intramural Championship—Nedunzchozhian House— 22 Pts.

### For Pandits

1. Badminton— Ilango House
2. Volley-ball— Valluvar House
3. Basket-ball— Valluvar House
4. Tenikoit— 1. N. Krishnamoorthy 2. V. Veeriah

## INDIVIDUAL CHAMPIONSHIP.

Tie for Individual championship— 1. M. Ramaswamy
2. P. Karuppannan

Old boys' Assn. Shield is won
dy Valluvar House.

***Principal,***

**15-3-61.**

# Government Training College, Komarapalayam.

**23–11–1960.**

## Tamil Pandits Training Course I Course Prize Distribution Day.

### Games

1. Volley ball— Valluvar House
2. Basket ball— Ilango House
3. Badminton— Ilango House
4. Tenikoit— 1. Sri N. Dorairaj
   2. Sri. V. Kali Goundan

### Sports

1. 100 Yds. 1st R. Thangavelu
   2nd P. Venkatachalam
   3rd Thirugnanasambandam
2. High jump 1st V. P. Venkatachalam
   2nd P. Venkatachalam
   3rd V. R. Aranganathan
3. Long jump 1st P. Venkatachalam
   2nd V. P. Venkatachalam
   3rd R. Thangavelu
4. Shot put 1st P. Venkatachalam
   2nd M. Seetharaman
   3rd P. Ramaswamy
5. Discuss throw— 1st M. Dorairaj
   2nd V. Kali Goundan
   3rd P. Venkatachalam
6. Cricket ball throw— 1st S. C. Namachivayam
   2nd V. P, Venkatachalam
   3rd P. Venkatachalam
7. Winner— Sri. P. Venkatachalam
8. Runner up— V. P. Venkatachalam

# Government Training College, Komarapalayam

## VI COLLEGE DAY CELEBRATIONS, MARCH 1961.

### LIST OF PRIZE WINNERS.

**Tamil Elocution:**

B. T. I. R. Rajadorai
II. S. Varadarajan

P. T. I. R Raghupathi
II. T. Guruswami

**Tamil Essay:**

B. T. I. G Francis Dorairaj
II. P Subbaroyan

P. T. I. A. Balasundaram
II. K. Ramasamy

**English Elocution:**

B. T. I, G. Francis Dorairaj
II. T. S. Vasanthakumar

**English Essay:**

B. T. I. G Francis Dorairaj
II N. Kumaresan

**Music (Tamil):**

I Syed Tajuddin (P. T.)
II. T. Guruswami (P. T.)
III T. S. Vasanthakumar (B T.)

General Proficiency prizes awarded by the Old Boys' Association for securing the highest marks at the University Examinations and at the Pandits' Training Certificate Examinations held in April 1960, May 1960 and December 1960.

B. T. Degree: V Narasimhachari April 1960

Pandits, Training: A. Natarajan, Vidvan—May 1960
S C. Namachivayam, Vidvan—December 1960.

# Our Exchange List.

1. Vivekananda Training College, Tirupparoythurai.
2. Lady Willingdon Training College, Madras.
3. The Assumption College, Changanachery.
4. M. D. T. Hindu College, Thirunelveli.
5. The Kumbakonam Government College, Kumbakonam.
6. The Arts College, Salem.
7. St Xaviers Teachers Training College, Palayamkottai.
8. Government Training College, Pudukkottai.
9. A. V. C College, Mayuram.
10. Government Training College, Vellore.
11. St. Mary's College, Tuticorin.
12. H H The Rajah's College, Pudukkottai.
13. Sri Pushpam College, Poondi.
14. The Thiagaraja College, Madras-21.
15. Government Brennen College, Tellicherry.
16. St. Joseph College, Trichirapalli.
17. Government Arts College, Coimbatore.
18. The Government Arts College, Ootacamund.
19. The Jamal Muhammed College, Trichirappalli.
20. P. S. G Arts College, Coimbatore.
21. The National College, Trichirappalli.
22. The Loyola College, Madras
23. Government College, Mercara.
24. V H. N. Senthi Kumara Nadar College, Virudunagar.
25. The Government College for Women, Coimbatore.
26. Sri Ramakrishna Mission Vidyalaya Teachers College, Periyanaickanpalayam.
27. The Vivekananda College, Madras.
28. Government Training College, Calicut.
29. St Christopher Training College, Madras.
30. The Government Post-graduate Basic Training College, Orathanad.
31. Teachers College, Saidapet, Madras-15.
32. Mahajana College, Erode
33. Dr. Alagappa Chettiar Training College, Karaikudi.
34. Central Education Library, Ministry, of Education, New Delhi.
35. Theagaraja College of Preceptors, Madurai.

Statement about ownership and other particulars about newspaper (The Government Training College, Magazine for 1960—61) to be published in the first issue every year after the last day of February.

## FORM IV.

**[*See Rule 6.*]**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Komarapalayam (Salem District) South India. |
| 2. | Periodicity of its Publication | : | Annual. |
| 3. | Printer's Name | : | A. V. P. Venkataraman. |
| | Nationality | : | Indian. |
| | Address | : | Sri Shanmuga Press, Komarapalayam Salem District. |
| 4. | Publisher's Name | : | S. Palanisamy. |
| | Nationality | : | Indian. |
| | Address | : | Govt. Training College, Komarapalayam. |
| 5. | Editor's Name | : | S. Palanisamy. |
| | Nationality | : | Indian. |
| | Address | : | Govt. Training College, Komarapalayam. |
| 6. | Names and address of individuals who own the news paper and partners or share holders holding more than one percent of the total capital. | | ——— |

I, S. Palanisamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*S. Palanisamy,*

Signature of Publishers.


Dated 22—4—61.

போன்: 33. தந்தி: 'சொஸைட்டி' ஸ்தாபிதம்: 1938.

சென்னை இராஜ்யத்திலேயே மிகச் சிறந்த சொஸைட்டி என்று
பரிசு பெற்றதும், கைத்தறி ஜவுளி போட்டிகளில்
முதற் பரிசு பெற்றதும்

சேலம்

அம்மாப்பேட்டை சொஸைட்டி



எங்களிடம் 20 ரூ. முதல் 100 ரூ. வரை உங்களுக்குத் தேவையான சேலை, வேட்டி, துண்டு, கர்சீப், ஷர்ட்டிங் மற்றும் ஜரிகை பேட்டு ரகங்களும் புதுமையான டிஸைன்களில் குறைந்த விலையில் கிடைக்கும். எங்கள் ஜவுளிகள் இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளி நாடுகளிலும் விற்பனை செய்யப்படுகிறது.

A. மாரியப்பன், M. L. A.,
தலைவர்.

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிமிடெட், S. 532,
அம்மாப்பேட்டை, சேலம்-3. (S. India)

*Edited and published by:*
*S. Palanisamy, M. A., B. Ed., Government Training College, Komarapalayam,*
*and printed by A. V. P. Venkataraman, at Sri Shanmuga Press, Komarapalayam*